இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

# தினபூமி

thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

கோவை, வியாழன், டிசம்பர் 12, 2024 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00



**2 நாட்கள் பயணமாக வரும் 15-ம் தேதி இந்தியா வருகிறார் இலங்கை அதிபர்: ஜனாதிபதி, பிரதமர் மோடியுடன் சந்திப்பு**
...2-ம் பக்கம்

**டெல்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி தனித்து போட்டி: அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு**
...3-ம் பக்கம்

**ஐ.சி.சி. டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை: பந்துவீச்சாளர்களில் ஜஸ்ப்ரிட் பும்ரா, ஆல்ரவுண்டர்களில் ஜடேஜா முதலிடம்**
...7-ம் பக்கம்





● 'வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார்' நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று கேரள மாநிலத்திற்கு சென்ற தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### கேரளாவில் தமிழக அரசால் ரூ.8.5 கோடியில்

# புனரமைக்கப்பட்ட பெரியார் நினைவகம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்

## கேரள முதல்வர் பினராயி விஜயனும் பங்கேற்பு

சென்னை, டிச. 12-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் இருந்து விமானம் மூலம் கேரளா புறப்பட்டு சென்றார். கேரள மாநிலம் கோட்டயத்தில் ரூ.8.5 கோடியில் புனரமைக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் திறப்பு விழா இன்று காலை நடைபெறுகிறது. திறப்பு விழாவுக்கு அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் தலைமை தாங்குகிறார். இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு நினைவகத்தை திறந்து வைக்கிறார்.**

**100 ஆண்டுகள்...**

கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள வைக்கத்தில் கோவில் நுழைவுப் போராட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் கடந்துள்ளது. தந்தை பெரியார் சமூகநீதி காக்க போராடிப் பெற்ற வெற்றியை நினைவுகூரும் வகையில், தந்தை பெரியாருக்கு வைக்கத்தில் நினைவுச் சின்னம் அமைக்க உத்தரவிடப்பட்டு 1994-ம் ஆண்டு நினைவிடம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நினைவிடத்தை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

**அமைச்சர் ஆய்வு...**

இதை தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு வைக்கம் பகுதியில் உள்ள பெரியார் நினைவகத்தில் ஆய்வு மேற்கொண்டார் கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கம் பகுதியில் பெரியார் அறப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டதன் நினைவாக தமிழ்நாடு அரசு சார்பில் 70 சென்ட் பரப்பில் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய நிரந்தர புகைப்பட கண்காட்சிக் கூடம், நூலகம், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவை அமைந்து உள்ளது.

**அமர்ந்த நிலையில்...**

மேலும் அமர்ந்த நிலையில் பெரியார் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்த கட்டிடங்களில் ஏற்பட்ட கரையான் அரிப்பு போன்றவற்றால் நினைவிடம் பழமையானதால் தமிழக அரசு சார்பில் ரூ.8.5 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதை திறந்து வைக்க நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கேரளா சென்றார். திறப்பு விழா முடிந்ததும் இன்று மாலை அவர் சென்னை திரும்புகிறார்.

### டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்ய கோரி

# பாராளுமன்றத்தில் தமிழக எம்.பி.க்கள் வலியுறுத்தல்

புது டெல்லி, டிச. 12-

**மதுரை டங்ஸ்டன் கனிம சுரங்கத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று பாராளுமன்ற மக்களவையில் தமிழக எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.**

மதுரை மாவட்டம் நாயக்கர்பட்டியில் மாநில அரசின் அனுமதி இல்லாமல் தனியார் நிறுவனத்துக்கு மத்திய அரசு வழங்கிய டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை ரத்து செய்யக்கோரி, கடந்த 9-ம் தேதி தமிழகசட்டசபையில் கொண்டு வரப்பட்ட தனி தீர்மானம் அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது.

இதனையடுத்து டங்ஸ்டன் விவகாரம் குறித்து விவாதிக்கக் கோரி தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி நேற்று நோட்டீஸ் வழங்கினார். அவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்துவிட்டு விவாதம் நடத்த வேண்டுமென அதில் கனிமொழி எம்.பி கோரிக்கை விடுத்தார். மேலும் காங்கிரஸ் கட்சி சார்பாக மாணிக்கம் தாகூரும் நோட்டீஸ் வழங்கி இருந்தார்.

இந்த நிலையில், டங்ஸ்டன் கனிம சுரங்கத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மக்களவையில் தமிழக எம்.பி.க்கள் வலியுறுத்தினர். மக்களவையில், தி.மு.க. எம்.பி.கனிமொழி பேசுகையில், மதுரையில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைத்தால், கலாச்சார மற்றும் பாரம்பரிய சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இச்சுரங்கத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கும் முன்பு, மாநில அரசிடம் ஆலோசிக்கவில்லை.

இந்த திட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என தமிழக முதல்வரும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். எனவே கனிம சுரங்கத்திற்கான அனுமதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார். தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு பேசுகையில், தமிழக அரசின் அனுமதியின்றி சுரங்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது; சுரங்க உரிமத்தை ரத்து செய்யக் கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்த தீர்மானத்தை ஏற்று மத்திய அரசால் வழங்கப்பட்ட டங்ஸ்டன் கனிம சுரங்க உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார். மக்களவையில் காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாக்கூர் பேசியதாவது:- டங்ஸ்டன் சுரங்கத்தை பொறுத்தமட்டில் மதுரை மாவட்டத்தில் அழகர் கோவில் மற்றும் அரிட்டாப்பட்டிக்கு நடுவில் அமைவதற்காக மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதும் அதற்காக வேதாந்தா நிறுவனத்திற்கு அள்ளிக் கொடுக்கப் போகிறது என்ற முடிவும் அதிர்ச்சியை தருகிறது.

பா.ஜ.க.வை பொறுத்தவரையில் தொடர்ந்து அழகர்கோவில் போன்ற இறை நம்பிக்கை உள்ள இடங்களையும், முருகனின் அறுபடை வீடுகளையும் அழிப்பதிலேயே துடிக்கிறது. ஏன் என்று தெரியவில்லை. வேதாந்தாவுக்கு சாதகமாக பா.ஜ.க. அரசு செயல்படுகிறது. எனவே தமிழக அரசின் தீர்மானத்தை ஏற்று டங்ஸ்டன் சுரங்கத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார்.

# தமிழ்நாட்டில் பைக் டாக்சிகள் இயங்குவதற்கு தடை இல்லை

## அமைச்சர் சிவசங்கர் அறிவிப்பு

சென்னை, டிச. 12-

**தமிழகத்தில் பைக் டாக்சிகள் இயங்கலாம், ஆனால் விதி மீறலில் ஈடுபடக் கூடாது என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.**

வணிக நோக்கத்திற்காக (பைக்-டாக்சி) பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனங்களை நேற்று முதல் ஆய்வு செய்து மோட்டார் வாகன சட்டப்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மண்டல மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

மேலும் சிறப்பு வாகன தணிக்கை மேற்கொண்டு மண்டலம் வாரியாக தினசரி மாலை 7 மணிக்கு அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மோட்டார் வாகன விதியை மீறி இருசக்கர வாகனங்களை வணிக நோக்கத்திற்காக பயன்படுத்துவதாக புகார் எழுந்த நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்ட விவகாரம் தொடர்பாக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சிவசங்கரன் கூறியதாவது,

பைக் டாக்சிக்கு ஒரு புறம் வரவேற்பு, மறுபுறம் எதிரிப்பு இருந்தாலும் இதில் பயணம் செய்பவர்களின் பாதுகாப்பு கருதியே கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வாடகை அல்லாத வாகனங்களில் ஒருவர் பயணம் செய்வதை சட்டம் ஏற்றுக்கொள்ளாத சூழல் உள்ளது.

இதனால் சிறு விபத்து ஏற்பட்டால் கூட நீதிமன்றத்தால் நிவாரணம் மறுக்கப்படுகிறது. பைக் டாக்சி விவகாரத்தில் மத்திய அரசுடன் இணைந்து முடிவெடுக்க வேண்டி உள்ளது. மத்திய அரசு இந்தியா முழுவதும் பைக் டாக்சிகள் இயக்க சில விதிமுறைகளை வழங்கி உள்ளது.

இதுகுறித்து குழு அமைத்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பைக் டாக்சிக்களில் பயணம் செய்வோரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆய்வு செய்து வருகிறோம். பைக் டாக்சி பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி வருகிறது. அதே சமயம் ஆட்டோ ஓட்டுநர்கள் பாதிக்கப்படுவதாகவும் கருத்து நிலவுகிறது.

தமிழகத்தில் பைக் டாக்சிகள் இயங்கலாம், ஆனால் விதி மீறலில் ஈடுபடக் கூடாது. விதிமீறல்களில் ஈடுபடக்கூடாது என்பதற்காகவே தணிக்கைக்கு உத்தரவிட்டுள்ளோம். உரிய உரிமம், மூன்றாம் நபர் காப்பீடு உள்ளிட்ட ஆவணங்களுடன்தான் இயக்க வேண்டும். விதிகளின்படி பைக் டாக்சிகள் இயக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

### 143-வது பிறந்த நாள்: டெல்லியில்

# பாரதி நூல்களின் தொகுப்பை வெளியிட்டார் பிரதமர் மோடி

புது டெல்லி, டிச. 12-

**மகாகவி சுப்பிரமணிய பாரதியின் 143-வது பிறந்தநாள் விழா நேற்று நாடு முழுவதிலும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பாரதியின் முழுமையானப் படைப்பு நூல்களின் தொகுப்பை பிரதமர் மோடி டெல்லியில் நேற்று வெளியிட்டார்.**




மத்திய கலாச்சாரத் துறையின் கீழான சாகித்ய அகாடமி சார்பில் பிரதமரின் அரசு இல்லத்தில் இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது. கால வரிசையில் பாரதி படைப்புகள் என்ற பெயரில் தமிழில் வெளியிடப்பட்ட இந்நூல்களை சீனி விஸ்வநாதன் தொகுத்துள்ளார்.

இவ்விழாவில் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவாத், நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த தொகுப்பில் சுப்பிரமணிய பாரதியின் எழுத்துக்களின் பதிப்புகள், விளக்கங்கள், ஆவணங்கள், பின்னணி தகவல்கள் மற்றும் தத்துவ விளக்கக் காட்சி போன்ற விவரங்கள் இடம் பெற்றுள்ளன. முதன்முறையாக பாரதியாரின் இந்த தொகுதிகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. தமிழகத்தின் 123 ஆண்டுகள் பழமையான அலையன்ஸ் நிறுவனம் இதனை வெளியிட்டுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி,

மகாகவி சுப்ரமணிய பாரதியின் படைப்புகள் வெளிவருவது என்பது அவருக்கு குறிப்பிடத்தக்க மரியாதையை அளிப்பதாகும். நாட்டின் தேவைகளை மனதில் கொண்டு பாடுபட்ட சிறந்த சிந்தனையாளர் சுப்ரமணிய பாரதி. அவருடைய பார்வை மிகவும் விசாலமானது. அந்த காலகட்டத்தில் நாட்டிற்கு தேவையான அனைத்து திசைகளிலும் அவர் பணியாற்றினார்.

பாரதியார் தமிழ்நாட்டின், தமிழ் மொழியின் பாரம்பரியம் மட்டுமல்ல, அவர் தனது ஒவ்வொரு மூச்சையும் அன்னை பாரதத்தின் சேவைக்காக அர்ப்பணித்த சிந்தனையாளர். நம் நாட்டில், வார்த்தைகள் வெறும் வெளிப்பாடாக மட்டும் இல்லாமல், ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. வார்த்தைகளின் எல்லையற்ற ஆற்றலைப் பொக்கிஷமாகக் கருதும் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அதனால்தான் நம் ஞானிகளின் வார்த்தைகள் அவர்களின் எண்ணங்கள் மட்டுமல்ல, அவர்களின் சிந்தனை, அனுபவம் மற்றும் ஆன்மீக பயிற்சியின் சாறாகும். சுப்ரமணிய பாரதி போன்ற ஆளுமை நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கக்கூடியது. அவருடைய சிந்தனை, புத்திசாலித்தனம், பல பரிமாண ஆளுமை ஆகியவை எல்லோரையும் ஆச்சரியப்படுத்துகிறது என குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேசம் வாராணசியின் காசி தமிழ் சங்கமம் கடந்த 2022-ல் முதன்முறையாக நடந்தது. அப்போது, பாரதியின் பிறந்த நாளை மத்திய கல்வித் துறை அமைச்சகம் இனி வருடந்தோறும் தேசிய மொழிகள் தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தது.

இதன் காரணமாக, நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் இவ்வாண்டு பாரதியாரின் பிறந்தநாள் முதன் முறையாக கொண்டாடப்படுகிறது.

# தி.மலையில் மகா தீபம் ஏற்றும் நிகழ்வு: பக்தர்கள் மலையேற அனுமதி இல்லை

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, டிச. 12-

**திருவண்ணாமலையில் மகா தீப தினத்தன்று, மலையேற பக்தர்களுக்கு அனுமதி இல்லை. பரணி தீபத்துக்கு மட்டும் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.**


சென்னையில் தமிழக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, தீப திருவிழா தொடங்குவதற்கு முன்பே கடந்த மாதம் 18-ம் தேதி துணை முதல்வர் உதயநிதி கிரிவலப் பாதையை ஆய்வு செய்தார். அம்மாவட்ட அமைச்சர் எ.வ.வேலு மற்றும் நானும் மூன்று முறைகள ஆய்வு செய்தோம். மாவட்ட கலெக்டர் தலைமையில் கலந்தாய்வு கூட்டத்தையும் நடத்தினோம்.

அதைத்தொடர்ந்து தலைமைச் செயலாளர் தலைமையில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் இயக்குநர் தலைமையில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் பிரேமலதா தலைமையில் ஏற்படுத்தப்பட்ட 8 பேர் கொண்ட குழுவினர் கடந்த 7,8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் கள ஆய்வு செய்து அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றுள்ளது. அந்த அறிக்கையில், அதிகமான மனிதர்களை மலையின் மீது ஏற்றக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


எனவே, இந்த முறை பக்தர்கள் யாரும், மலையின் மீது ஏற அனுமதி கிடையாது. அது தொடர்பான அறிவிப்பை அம்மாவட்ட கலெக்டர் முறையாக வெளியிடுவார். அதே நேரம், மலை உச்சியில் தீபம் ஏற்ற மேலே கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள், 350 கிலோ கொண்ட திரி உள்ளிட்ட மற்ற பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

முதல் நாளுக்கு தேவைப்படுகிற 40 டின் நெய், அதாவது ஒரு டின்னுக்கு 15 கிலோ என்றால் 600 கிலோ நெய்யை மேலே கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அதை எடுத்துச் செல்லும் நபர்களுக்குத் தேவையான உணவு, காவலர்கள், வனத்துறை உட்பட எவ்வளவு நபர்கள் செல்ல வேண்டும் என்று அறிக்கையில், அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தளவுக்கு மட்டுமே மனிதசக்தி பயன்படுத்தப்படவுள்ளது. ஏற்கெனவே இந்த தீபத்துக்காக, ஆவினிடமிருந்து 4500 கிலோ நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பரணி தீபத்துக்கு மட்டும் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| ↑ 16.09 பாயிண்ட் | ↑ 31.75 பாயிண்ட் |
| 81,526.14 | 24,641.80 |




**தங்கம்**
1 சவரன் ₹ 58,280
1 கிராம் ₹ 7,285



**வெள்ளி**
1 கிலோ ₹ 103,000
1 கிராம் ₹ 103.00

**டாலர்** ₹ 84.83

**பெட்ரோல்** ₹ 100.75
**டீசல்** ₹ 92.34



# 2 நாள் பயணமாக வரும் 15-ம் தேதி இந்தியா வருகிறார் இலங்கை அதிபர்

## ஜனாதிபதி, பிரதமர் மோடியுடன் சந்திப்பு



**கொழும்பு, டிச. 12-**

2 நாள் பயணமாக வரும் 15-ம் தேதி இந்தியாவுக்கு இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக வருகை தரவுள்ளார். அப்போது ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோரை திசநாயக சந்தித்து பேசவுள்ளார்.

கடந்த செப்டம்பரில் இலங்கை அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் தேசிய மக்கள் சக்தி கூட்டணி வேட்பாளர் அனுர குமார திசநாயக வெற்றி பெற்று புதிய அதிபராகப் பதவியேற்றார்.

இதைத் தொடர்ந்து, கடந்த நவம்பரில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி கூட்டணி அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், இலங்கை தலைநகர் கொழும்பில் சுகாதாரத் துறை அமைச்சரும், அமைச்சரவை செய்தித் தொடர்பாளருமான நலிந்த ஜயதிஸ்ஸ செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அதிபர் அனுர குமார திசநாயக வரும் 15-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை, 2 நாள் பயணமாக இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். இந்தப் பயணத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோரை அவர் சந்திக்க உள்ளார். அவருடன் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத், இணை அமைச்சர் அனில் ஜயந்த பொனாண்டோ ஆகியோரும் செல்ல உள்ளனர் என்றார்.

இந்தச் சந்திப்பின் போது இருநாடுகள் இடையே நிலவும் மீனவர்கள் பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும்.

எதிர்கால திட்டங்கள் பற்றியும் ஆலோசிக்கப்படலாம் என கூறப்படுகிறது. இலங்கை அதிபராக அனுர குமார திசநாயக பதவியேற்ற பின் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் வெளிநாட்டினருக்கு பிறக்கும்

# குழந்தைக்கு குடியுரிமை வழங்கும் சட்டத்தை நீக்க டிரம்ப் திடீர் முடிவு

**வாஷிங்டன், டிச. 12-**

அமெரிக்காவில் வெளிநாட்டினருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கும் சட்டத்தை நீக்க டிரம்ப் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று உள்ள டிரம்ப் வருகிற ஜனவரி 20-ம் தேதி பதவியேற்கிறார்.இதற்கிடையே தனது 2-வது முறை ஆட்சியில் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்து டிரம்ப் ஆலோசனை நடத்தி வருகிறார்.

குறிப்பாக சட்ட விரோத குடியேற்றத்தை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் அமெரிக்காவில் வெளிநாட்டினருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கும் சட்டத்தை நீக்க டிரம்ப் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க அரசியலமைப் பின் 14-வது திருத்தத்தின் படி, பெற்றோரின் குடியுரிமையைப் பொருட்படுத்தாமல், அதன் எல்லைக்குள் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குகிறது. 150 ஆண்டு கால சட்டத்தை மாற்றிமைக்க டிரம்ப் முடிவு செய்துள்ளார்.

அதேவேளை அதை செயல்படுத்துவது என்பது டிரம்புக்கு கடினமாக இருக்கும்.ஏற்கனவே டிரம்ப் அளித்த பேட்டி ஒன்றில், இச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். இந்த அமைப்பு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. அமெரிக்க குடிமகனாக மாறுவதற்கு கடுமையான தரநிலைகள் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டிரம்பின் இந்த முடிவால் அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் அதிகளவில் பாதிக்கப்படுவார்கள்.

## ஊழல் குற்றச்சாட்டு குறித்த விசாரணை:

# இஸ்ரேல் பிரதமர் நீதிமன்றத்தில் ஆஜர்

**டெல்அவிவ், டிச. 12-**

தன் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைக்காக முதல் முறையாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு விற்கு எதிராக மோசடி, நம்பிக்கை மீறல் மற்றும் லஞ்சம் பெற்றது தொடர்பாக தனித்தனி வழக்குகள் தொடரப்பட்டது. இந்நிலையில் தன் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைக்காக முதல் முறையாக பிரதமர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரானார். நீதிமன்றத்துக்குள் நுழைந்தவுடன் நீதிபதிகளுக்கு அவர் வணக்கம் தெரிவித்தார். பின்னர், தனக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு நெதன்யாகு மறுப்பு தெரிவித்தார்.

பணக்கார தொழிலதிபருக்கு சலுகை காட்டுவதற்காக, சிகரெட் மற்றும் ஷாம்பென் மதுபானங்கள் லஞ்சமாக பெற்றது, தன்னைப் பற்றிய சாதகமான செய்திகள் வெளியிடுவதற்காக ஊடக நிறுவனம் ஒன்றுக்கு விதிமுறைகளில் சலுகை அளித்தது போன்ற வழக்குகள் அவர் மீது தொடரப்பட்டன.

இந்த வழக்குகள் தொடர்பான விசாரணை, டெல்அவிவ் நீதிமன்றத்தில் துவங்கியுள்ளது. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் நேரில் ஆஜரானார். நாற்காலியில் அமர நீதிமன்றம் அனுமதி அளித்தபோதும், விசாரணை முழுதும் நின்றபடியே, தன் தரப்பு வாதத்தை அவர் முன்வைத்தார்.

இந்த வழக்கின் விசாரணைக்காக எட்டு ஆண்டுகளாக காத்திருந்தேன். இதன் வாயிலாக என் தரப்பு உண்மைகளை முன் வைக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வழக்குகள் அனைத்தும், பொய்களின் பெருங்கடல். என் மீது எந்த குற்றமும் இல்லை. ஊடகங்கள் மற்றும் சில எதிர்க்கட்சிகள் அரசியலுக்காக இதுபோன்ற பொய் புகார்களை கூறியுள்ளனர் என்று அவர் விசாரணையின்போது தெரிவித்தார்.

இஸ்ரேல் நாட்டு சட்டப்படி, வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பிரதமர் பதவி விலகத் தேவையில்லை. அதே நேரத்தில் தார்மீக அடிப்படையில் அவர் பதவி விலக, பல்வேறு தரப்பினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த வழக்குகளின் விசாரணை, வாரத்தில் மூன்று நாட்களில், தினமும் ஆறு மணி நேரம் நடக்கும். விசாரணை பல வாரங்களுக்கு நீடிக்கும் என, தெரிகிறது. நீதிமன்றத்தில் பிரதமர் நெதன்யாகு ஆஜரானபோது, அவருடைய ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்கள் பெருமளவில் அங்கு குழுமியிருந்தனர்.

# அமெரிக்காவில் ஒரு பில்லியன் டாலர் முதலீடு செய்தால் எளிதில் அனுமதி

## முதலீட்டாளர்களுக்கு டிரம்ப் ஆபர்

**வாஷிங்டன், டிச. 12-**

அமெரிக்காவில் ஒரு பில்லியன் டாலர் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு, அனைத்து விதமான அனுமதிகளும் எளிதில் வழங்கப்படும் என அமெரிக்கா அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். அவர் வரும் ஜனவரி 20-ம் தேதி அதிபராக பதவியேற்க உள்ளார். அவர் அதிபராக பதவியேற்ற பிறகு, உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வருவேன். அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுவதை தடுப்பேன் என கூறியுள்ளார்.

இந்த சூழலில், அவர் தொழிலதிபர்களுக்கு ஒரு ஆபர் ஒன்றை அறிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

அமெரிக்காவில் ஒரு பில்லியன் டாலர் முதலீடு செய்யும் நபர் அல்லது நிறுவனங்களுக்கு அனைத்து விதமான அனுமதிகளும் எளிதில் வழங்கப்படும்.

அவர்களுக்கு எந்த விதமான தாமதமும் இன்றி அனைத்து கோரிக்கைகளுக்கும் அனுமதி வழங்குவோம். அனைவரும் தயாராகுங்கள். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார்.

இதற்கு டிரம்பை டுவிட்டர் தள உரிமையாளர் எலான் மஸ்க், நல்ல முடிவு என பாராட்டியுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பாரதியாரின் சிலையை பல்லக்கில் தூக்கிச்சென்ற தமிழக கவர்னர் ரவி



**சென்னை, டிச. 12-**

பாரதியாரின் பிறந்த நாளையொட்டி நேற்று பாரதியாரின் தீவிர பற்றாளர்களுடன் சேர்ந்து அவரது சிலை பல்லக்கு ஊர்வலத்தை கவர்னர் ஆர்.என்.ரவி கொடியசைத்து துவக்கி வைத்து பல்லக்கை தூக்கி சென்றார்.

மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்தநாள் விழா நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி சென்னை கிண்டி கவர்னர் மாளிகையில் நேற்று பாரதியார் பிறந்த நாள் விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

அப்போது அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பாரதியாரின் உருவ படத்திற்கு கவர்னர் ஆர்.என்.ரவி மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து பாரதியாரின் தீவிர பற்றாளர்களுடன் சேர்ந்து பாரதியின் சிலை பல்லக்கு ஊர்வலத்தை கவர்னர் ஆர்.என்.ரவி கொடியசைத்து துவக்கி வைத்து பல்லக்கை தூக்கி சென்றார்.

இந்த ஊர்வலம் அங்கு உள்ள மகாகவி பாரதியாரின் நினைவு இல்லத்துக்குச் சென்றதும் பாரதியாரின் சிலை அங்கு வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இது குறித்து கவர்னர் ஆர்.என்.ரவி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

பாரதத் தாயின் தலைசிறந்த மகன்களில் ஒருவரான மகாகவி சுப்பிரமணிய பாரதியை, அவரது பிறந்தநாளில் நன்றியுள்ள தேசம் மிகுந்த மரியாதையுடன் நினைவுகூர்கிறது. மிகத் தீவிரமான மற்றும் உணர்ச்சிமிக்க சுதந்திர போராட்ட வீரர், புரட்சிக் கவிஞர், மிகச்சிறந்த இலக்கிய மேதை, பாலின பேதங்களைக் களைந்து, சமூக நீதியின் அடையாளமாகத் திகழும் சமூக சீர்திருத்தவாதியான பாரதி, ஒவ்வொரு பாரதியருக்கு உள்ளும் உத்வேகமூட்டும் சக்தியாக நீடிக்கிறார்.

அவரது வலிமையான எழுத்துக்கள் பல லட்சக்கணக்கானோரை சுதந்திர போராட்டத்தில் சேர ஊக்குவித்ததோடு, பாரதிய மொழிகள், ஆன்மிகம், கலாசாரம், மரபுகள் மற்றும் பாரம்பரியம் குறித்த ஆழமான பெருமையை மீட்டெடுத்தன.

பாரதியாரின் வாழ்க்கை, லட்சியங்கள் மற்றும் தொலைநோக்கு ஒரே பாரதம் உன்னதபாரதம் என்ற நோக்கத்தை கட்டியெழுப்ப அசைக்க முடியாத உத்வேகத்தின் ஆதாரமாகத் தொடர்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**12-12-2024**




**மேஷம்:-** தொழில் வளம் பெருகி திருப்திகரமான பண வரவு ஏற்படும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள். வரும் வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து செயல்பட்டால் வியாபாரம் பெருகும்.

**ரிஷபம்:-** பெண்களால் வெட்டிச்செலவுகள் ஏற்பட்டு, அதன் காரணமாக பணமுடை அதிகரிக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**மிதுனம்:-** அனைத்து வகையிலும் நன்மைகளும், தன லாபம், ஏற்படும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாகன யோகம் ஏற்படும். மதிப்பு, மரியாதை கூடும். பிரிந்திருந்தவர் கூடியும் மகிழ்வர்.

**கடகம்:-** நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடக்கும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். பிறருக்குக் கட்டளை இடும் படியான அதிகாரமுள்ள பதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:-** தெய்வீக காரியங்களில் ஈடுபட்டு மன அமைதி அடைவார்கள். வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கன்னி:-** எதிலும் முறைதவறி நடக்காதீர்கள். தவறு செய்தால் தண்டிக்க படுவீர்கள். உயர்வு வரும்போது பணிவு வேண்டும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலம் ஏற்படும்.

**துலாம்:-** வாக்கால் நல்ல வருமானம் அடைவீர்கள். அன்பு உறவுகளை சந்திப்பதால் அகம் மகிழும். படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு வகைகள் ஆகியவையும் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** வியாபாரப் பயணங்களால் இலாபம் ஏற்படும். எல்லா வளமும் பெருகும். அழகுப் பெண்களின் சிநேகமும், அழகான தனி வீடு அமையும். சுப காரியங்கள் நிறைவேறும்.

**தனுசு:-** மனஅமைதி பெற தியானம் செய்க. கௌரவக் குறைவு ஏற்படுத்தும் செயல்கள் புரிவதை தவிருங்கள். விபத்து ஏற்படாதிருக்க பயணத்தின் போது எச்சரிக்கை தேவை.

**மகரம்:-** வியாபாரத்தில் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கப் பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள். தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**கும்பம்:-** அன்பு மனையாள் செய்யும் பணிவிடை கண்டு அகம் மகிழ்வீர்கள். பல வழிகளில் வருமானம் பெருக மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். உடன் பிறப்பால் நன்மை உண்டு.

**மீனம்:-** நல்ல வருமானம் வருவது போல் தோற்றமளிக்கும் ஆனால் நினைத்தபடி வருமானம் இராது. தொழில், வியாபாரத்தில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும். பதவி அல்லது இட மாற்றங்கள் ஏற்படலாம்.

# மே.வங்கத்தில் பாபர் மசூதி கட்டப்படும் திரிணாமுல் எம்.எல்.ஏ. பேச்சால் சர்ச்சை

**கொல்கத்தா, டிச. 12-**

மேற்குவங்க மாநிலத்தில் பாபர் மசூதி கட்டப்படும் என திரிணாமுல் காங்கிரசின் எம்.எல்.ஏ.வான ஹுமாயூன் கபீர் அறிவித்துள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அயோத்தியில் இருந்த பாபர் மசூதி கட்ட அங்கிருந்த ராமர் கோயில் இடிக்கப்பட்டதாக வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் இறுதி தீர்ப்பில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயில் கட்ட சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருந்தது.

கடந்த 2019, நவம்பர் 9-ம் தேதி இந்த தீர்ப்பில், அயோத்திக்கு அருகில் பாபர் மசூதி கட்டவும் நிலம் ஒதுக்கவும் உத்தரவானது. இதையடுத்து உ.பி. அரசு சார்பில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கியும் அதன் பணிகள் இன்னும் துவக்கப்படவில்லை.

இந்நிலையில், பாபர் மசூதி மேற்குவங்க மாநில முர்ஷிதாபாத் மாவட்டத்தின் பெல்தங்காவில் கட்டப்பட வேண்டும் என குரல் எழுந்துள்ளது. இதை அம்மாநிலம் ஆளும் திரிணாமுல் காங்கிரசின் எம்.எல்.ஏ.வான ஹுமாயூன் கபீர் அறிவித்துள்ளார்.

இது குறித்து எம்.எல்.ஏ.வான கபீர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில்,

மேற்கு வங்க மாநிலத்தில் முஸ்லிம்கள் 34 சதவிகிதம் உள்ளனர். இங்கு அவர்கள் தலைநிமிர்ந்து பெருமையுடன் வாழ வேண்டும். இது முஸ்லிம்களின் உரிமை. இதற்காக நான் ஒன்றை முன்மொழிய விரும்புகிறேன். பெல்தங்காவில் 2025, டிசம்பர் 6-க்குள் 2 ஏக்கர் நிலத்தில் பாபர் மசூதியின் பணிகள் துவங்கும்.

சுமார் 90 சதவிகித முஸ்லிம்கள் வாழும் பெல்காவில் மசூதிக்காக 100 பேர் கொண்ட ஒரு அறக்கட்டளை அமைக்க வேண்டும். மசூதிக்காக பணப்பற்றாக் குறை இருக்காது. இதை கட்டுவதற்காக நான் ரூ. ஒரு கோடி நன்கொடை அளிக்க உள்ளேன் எனத் தெரிவித்தார்.

முர்ஷிதாபாத்தில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பரத்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வாக ஹுமாயூன் வகிக்கிறார். இவர் இங்கு முதன்முறையாக 2011 சட்டப்பேரவை தேர்தலில் தேர்வாகி தொடர்ந்து வென்று வருகிறார். தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ஹுமாயூன், தொடர்ந்து பா.ஜ.க.வினர் தம் ஆக்ரோஷத்தை காட்டினால் அவர்களை இல்லாமல் செய்ய வேண்டி வரும். இரண்டு மணி நேரத்தில் அனைவரையும் வெட்டி அருகிலுள்ள பாகீரதி நதியில் வீச வேண்டி வரும் எனப் பேசி வழக்கில் சிக்கினார்.

# அரசு பள்ளிகளில் தகுதியான கணினி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்

## ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, டிச. 12-**

அரசு பள்ளிகளில் தகுதியான கணினி ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மத்திய அரசின் சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்தர ஆய்வகம் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த நிதியின் மூலம் கணினி அறிவியல் பாடத்திற்கென்று பாடத்திட்டத்தினை உருவாக்கி, கணினி பயிற்றுநர்களைக் கொண்டு கணினி பாடத்தை மாணவ, மாணவியருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், ஆசிரியர்கள் பணியிடை பயிற்சிகள் மேற்கொள்ள பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் மத்திய அரசு சில விதிமுறைகளை வகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால், மேற்படி நிதியில் இருந்து மாணவ, மாணவியருக்கு கணினி அறிவியல் பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டிய தி.மு.க. அரசு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, கணினி அறிவியல் பட்டம் படித்த கல்வியியல் பட்டதாரிகளை பணியிடங்களில் அமர்த்தி மாணவ, மாணவியருக்கு கணினிப் பாடத்தை கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில், அதனைச் செய்யாமல், இந்தப் பணிகளில் தன்னார்வலர்களை நியமித்து உள்ளது.

மாநிலத்தின் செலவைக் குறைக்க தி.மு.க. அரசு இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது கடும் கண்டனத்திற்குரியது. மாநிலத்தின் செலவைவிட மிக முக்கியமானதாக விளங்குவது முறையான கல்வித் தகுதி பெற்ற கணினி ஆசிரியர்களை நியமிப்பதும், மாணவ, மாணவியர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதும் தான் என்பதை தி.மு.க. அரசு புரிந்து கொண்டு தகுதியான ஆசிரியர்களை நியமித்து கணினி அறிவியலை போதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ?

# ஆதவ் அர்ஜூனா பதிவால் பரபரப்பு

**சென்னை, டிச. 12-**

மகாகவி பாரதியாரின் பிறந்தநாளையொட்டி ஆதவ் அர்ஜூனா பதிவு ஒன்றை எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். அதில் நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ? என்று பதவிட்டுள்ளது தமிழக அரசியல் களத்தில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாரதியாரின் 143-வது பிறந்தநாள் விழா நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி மகாகவி பாரதியாரை போற்றும் வகையில் அவரது கவிதை வரிகளை குறிப்பிட்டு ஆதவ் அர்ஜூனா எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:-

“இந்திய நாட்டின் சுதந்திர வேட்கைக்குத் தனது கவிதை வரிகளால் உயிரூட்டியவர். அடக்குமுறைக்கு எதிரான சிந்தனைகளைத் தனது பாடல்களில் உருவாக்கியவர். ‘சாதிகள் இல்லையடி பாப்பா’ என்று சாதிக்கு எதிரான குரலை உரத்து முழங்கியவர், பெண்ணடிமை ஆதிக்கத்தையும் எதிர்த்து நின்றார். வறுமையான வாழ்வு தன்னை சூழ்ந்தபோதும் தான் கொண்ட கொள்கை இலட்சியத்தைக் கைவிடாதவர். நான் சோர்வடையும் பல நேரங்களில் எனக்கு உற்சாகம் கொடுக்கும் கவிதைகளை இயற்றிய மகாகவி பாரதியின் பிறந்தநாளைப் போற்றுவோம்.

தேடிச் சோறுநிதந் தின்று — பல சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம் வாடித் துன்பமிக உழன்று — பிறர் வாடப் பலசெயல்கள் செய்து — நரை கூடிக் கிழப்பருவமெய்தி — கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும் — பல வேடிக்கை மனிதரைப் போலே — நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ?..” என்று தெரிவித்துள்ளார்.

# ஜனவரியில் சிங்கப்பூர் அதிபர் ஒடிசா வருகை

**புவனேஸ்வர், டிச. 12-**

சிங்கப்பூர் அதிபர் தர்மன் சண்முகரத்தினம், அடுத்த மாதம் (ஜனவரி) ஒடிசாவுக்கு வருகை தர உள்ளார். இந்தியாவுக்கான சிங்கப்பூர் தூதர் சைமன் வாங், ஒடிசா தலைமைச் செயலகத்தில் முதல்வர் மோகன் சரண் மாஜியை சந்தித்த போது இந்த தகவலை உறுதி செய்தார்.

ஒடிசாவில் நடைபெறும் மாநில முதலீட்டாளர் உச்சி மாநாட்டின் (மேக் இன் ஒடிசா கான்க்ளேவ் 2025) முதல் வெளிநாட்டு பங்குதாரராக சிங்கப்பூர் இணைந்துள்ளது. இந்தியாவின் அந்நிய நேரடி முதலீட்டின் மிகப்பெரிய ஆதாரங்களில் சிங்கப்பூரும் ஒன்று.

இந்தியாவும் சிங்கப்பூரில் ஐ.டி., வங்கி மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் மூலம் வலுவான முதலீட்டை கொண்டுள்ளது. இந்தியா-சிங்கப்பூர் இடையே நீண்ட காலமாக நட்புறவு உள்ளது.

பரஸ்பர வளர்ச்சி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கான உறவுகளை வலுப்படுத்த இரு நாடுகளும் ஆர்வமாக உள்ளன. சிங்கப்பூரும் இந்தியாவும் 60 ஆண்டுகால ராஜதந்திர உறவைக் கொண்டாடுகின்றன.

இரு நாடுகளும் ஆழமான வரலாற்று, கலாசார மற்றும் பொருளாதார உறவுகளை கொண்டுள்ளன. இந்த நட்புறவு இப்போது வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் கலாசார பரிமாற்றம் போன்ற துறைகளை உள்ளடக்கிய ஒரு மூலோபாய கூட்டாண்மையாக உருவாகியுள்ளது.

இந்த இருதரப்பு உறவை நினைவுகூரும் வகையில், சிங்கப்பூர் அதிபர் ஜனவரியில் இந்தியா வருகிறார். ஒடிசா முதல்-மந்திரி மாஜி கடந்த மாதம் சிங்கப்பூர் சென்றபோது, சிங்கப்பூர் அதிபர் ஒடிசாவிற்கு வருகை தர ஏற்பாடு செய்யுமாறு அந்நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது அழைப்பை ஏற்று, சிங்கப்பூர் அதிபர் தனது இந்திய பயணத்தின் போது ஒடிசாவுக்கு வர முடிவு செய்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# டெல்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி தனித்து போட்டி

## அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு

**புது டெல்லி, டிச. 12-**

டெல்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தனித்து போட்டியிட்டப் போவதாக அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

டெல்லி சட்டமன்றத் துக்கு கடந்த 2020-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மொத்தம் உள்ள 70 இடங்களில் ஆம் ஆத்மி கட்சி 62 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்தது. பா.ஜ.க. 8 தொகுதிகளில் வென்றது. காங்கிரஸ் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில் டெல்லி சட்டசபைக்கு வரும் பிப்ரவரி மாதம் தேர்தல் நடைபெற உள்ளது. பா.ஜ.க.வுக்கு எதிராக களத்தில் நிற்கும் ஆம் ஆத்மி கட்சி, தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்கவைக்க கடுமையாக உழைத்து வருகிறது.

இந்த சூழலில் டெல்லி சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி கட்சிகள் கூட்டணிக்கான இறுதிக்கட்ட ஒப்பந்தத்தில் உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. இதன்படி காங்கிரசுக்கு 15 இடங்களும், மற்ற இந்தியக் கூட்டணி உறுப்பினர்களுக்கு 1-2 இடங்களும், மற்றவை ஆம் ஆத்மி கட்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் டெல்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தனித்து போட்டியிடும் என்று கெஜ்ரிவால் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில்,

டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி தனது சொந்த பலத்தில் இந்த தேர்தலில் போட்டியிடுகிறது. காங்கிரசுடன் கூட்டணி அமைய வாய்ப்பில்லை என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக டெல்லி சீலாம்பூர் தொகுதி ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. அப்துல் ரகுமான் அக்கட்சியிலிருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். ஆம் ஆத்மியில் முஸ்லிம்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாக கூறி அவர் கட்சியிலிருந்து விலகினார். இது ஆம் ஆத்மி கட்சிக்கு மற்றுமொரு அடியாகப் பார்க்கப்பட்டது.

இந்நிலையில் தான் சட்டமன்ற தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்று கெஜ்ரிவால் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சென்னை-சிங்கப்பூர் விமானத்தில் உரிய நேரத்தில்

# பெட்ரோல் கசிவு கண்டுபிடிப்பால் அதிர்ஷ்டவசமாக தப்பிய பயணிகள்

**சென்னை, டிச. 12-**

சென்னை-சிங்கப்பூர் விமானத்தில் உரிய நேரத்தில் பெட்ரோல் கசிவு கண்டுபிடிப்பால் அதிர்ஷ்டவசமாக 145 பயணிகள் உயிர் தப்பினர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூருக்கு நேற்று காலை 11.55 மணிக்கு 'ஏர் இந்தியா' விமானம் புறப்பட இருந்தது. இந்த விமானத்தில் 145 பயணிகள் இருந்தனர். இந்நிலையில், விமானம் புறப்படுவதற்கு முன்பாக விமானி இறுதிக்கட்ட பரிசோதனையை மேற்கொண்டார்.

அப்போது விமானத்தில் பெட்ரோல் கசிவு ஏற்பட்டிருப்பதை கண்டறிந்த அவர், உடனடியாக விமானத்தை நிறுத்தி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார். இதையடுத்து பொறியாளர்கள் மற்றும் விமான நிலைய அதிகாரிகள் விரைந்து வந்து விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர்.

தொழில்நுட்ப கோளாறு சரிசெய்யப்பட்ட பின்னர் விமானம் புறப்பட்டுச் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானத்தில் பெட்ரோல் கசிவு ஏற்பட்டதை கண்டறிந்து சரியான நேரத்தில் விமானத்தை விமானி நிறுத்தியதால் 145 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

உயர்தமிழுக்கு புதுநெறி காட்டிய புலவன்:

# பாரதியாரின் 143-வது பிறந்த நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

**சென்னை, டிச. 12-**

மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்த நாள் விழா நாடு முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் பாரதியாரின் பிறந்தநாளை முன்னிட்டு உயர்தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், உய்வகை காட்டும் உயர்தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன்! தமிழ்க் கவியில், உரைநடையில், தனிப்புதுமை படைத்த செந்தமிழ்த் தேனீ மகாகவி பாரதியாரின் பிறந்தநாளில் அவரை வணங்குகிறேன்.

மொழி - நாடு - பெண் விடுதலை - பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சென்னை மெரினா கடற்கரை சாலையில் உள்ள மகாகவி பாரதியாரின் உருவச்சிலைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

# முதல் கட்டமாக சிரியாவில் இருந்து 75 இந்தியர்கள் மீட்பு

## மத்திய வெளியுறவு அமைச்சகம் தகவல்

**டமாஸ்கஸ், டிச. 12-**

அசாதாரண சூழல் நிலவும் சிரியாவில் இருந்து முதல் கட்டமாக 75 இந்தியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்

சிரியாவில் 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான சண்டையில், சில முக்கிய நகரங்கள் கிளர்ச்சியாளர்கள் வசம் சென்றன.

கடந்த சில ஆண்டுகளாக பெரிய அளவில் மோதல் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது. அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து முன்னேறி தலைநகர் டமாஸ்கசையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 50 ஆண்டு கால ஆசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. அதிபர் ஆசாத் பாதுகாப்பு கருதி நாட்டை விட்டு வெளியேறி ரஷ்யாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதனால் சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அசாதாரண சூழல் நிலவும் சிரியாவில் இருந்து 75 இந்தியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு, லெபனான் சென்றுள்ளதாகவும், அங்கிருந்து வணிக விமானங்கள் மூலம் இந்தியாவுக்கு திரும்பவுள்ளனர் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்டவர்களில் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 44 ஜைரீன்கள் அடங்குவர். இவர்கள் சைதா ஜைனாபில் சிக்கியிருந்தனர். சிரியாவில் சிக்கித் தவித்த இந்தியர்களின் கோரிக்கைகள் மற்றும் அங்குள்ள பாதுகாப்பு நிலைமை குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் டமாஸ்கஸ் மற்றும் பெய்ரூட்டில் உள்ள இந்திய தூதரகங்கள் இணைந்து இந்த மீட்பு பணிகளை மேற்கொண்டதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக 75 பேர் மீட்கப்பட்டுள்ள போதிலும், இன்னும் சில இந்தியர்கள் சிரியாவில் உள்ளனர். அவர்கள் டமாஸ்கசில் உள்ள தூதரகத்துடன் +963 993385973 என்ற உதவி எண்ணிலும், வாட்ஸ்அப்பிலும், மற்றும் hoc.damascus@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் தொடர்பில் இருக்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

# மத்திய அமைச்சர் சுரேஷ் கோபியின் வீட்டில் திருட்டு: 2 பேரிடம் விசாரணை

**திருவனந்தபுரம், டிச. 12-**

கேரளாவில் மத்திய அமைச்சர் சுரேஷ் கோபியின் வீட்டில் இரும்பு பைப் உள்ளிட்ட சில பொருட்களை திருடிய 2 பேரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மத்திய பெட்ரோலியம் மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபியின் பெற்றோர் தங்கியிருந்த வீடு கொல்லம் அருகே உள்ள இரவிபுரம் பகுதியில் உள்ளது. இந்த வீட்டில் யாரும் தங்குவது கிடையாது. இதனால் பெரும்பாலும் பூட்டப்பட்டிருக்கும். சுரேஷ் கோபி அல்லது அவரது உறவினர்கள் இங்கு சென்று தங்குவது வழக்கம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சுரேஷ் கோபியின் தம்பி மற்றும் குடும்பத்தினர் இந்த வீட்டுக்கு சென்றனர். அப்போது 2 பேர் வீட்டின் சுவரை தாண்டி குதித்து வெளியே ஓடியது தெரியவந்தது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்கள் சென்று பார்த்தபோது வீட்டின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்த இரும்பு பைப் மற்றும் சில பொருட்களை காணவில்லை.

இது குறித்து இரவிபுரம் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணையை தொடங்கினர். அங்கு வைக்கப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை பரிசோதித்ததில் இருவரும் அப்பகுதியை சேர்ந்த திருடர்கள் என தெரியவந்தது. அவர்களை பிடித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

தி.மலை கார்த்திகை தீபத் திருவிழா:

# 850 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**கும்பகோணம், டிச. 12-**

திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் கோட்டம் சார்பில் 850 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் கோட்டம் சார்பில் 850 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவில் கார்த்திகை தீபத் திருநாள் நாளை (13-ம்தேதி) வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணிக்கு நடைபெறுகிறது. 15-ம் தேதி பவுர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது. இதை முன்னிட்டு இன்று முதல் (12-ம்தேதி- வியாழக்கிழமை) முதல் 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை அனைத்து பக்தர்கள் மற்றும் பொது மக்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டத்தின் மூலம் சிறப்பு பேருந்துகள் கும்பகோணம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருச்சி, கரூர், காரைக்குடி, ராமேஸ்வரம், புதுக்கோட்டை மற்றும் கும்பகோணம் கோட்டத்தின் பிற முக்கிய நகரங்களிலிருந்தும் மேற்கண்ட நாட்களில் 850 சிறப்பு பேருந்துகள் பக்தர்கள் வசதிக்காக இயக்கப்பட உள்ளது.

திருவண்ணாமலை நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக தற்காலிக பேருந்து நிலையங்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தற்காலிக பேருந்து நிலையத்திலிருந்து பக்தர்கள் கிரிவலப் பாதை சென்று திரும்பிவருவதற்கு வசதியாக சிற்றுந்துகள் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் தங்களின் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு பயணம் செய்ய ஏதுவாக https://www.tnstc.in என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் மொபைல் ஆப் மூலமாகவும் முன் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் பயணிகள் அடர்வு குறையும் வரை தேவைக்கு ஏற்ப பேருந்துகளை இயக்கிடவும், பக்தர்களுக்கு எவ்விதமான அசவுகரியமும் ஏற்படாமல் இருக்க அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பாரதியாரின் ஒருமைப்பாட்டை நாம் போற்றி கொண்டாடுவோம்

## ஆந்திர துணை முதல்வர் பதிவு

**அமராவதி, டிச. 12-**

பாரதியார் கற்பனை செய்த தேசிய ஒருமைப்பாட்டை போற்றி கொண்டாடுவோம் என பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்தநாள் விழா நாடு முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு பாரதியாரை போற்றும் வகையில் ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் தனது 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;-

புகழ்பெற்ற கவிஞரும், சுதந்திரப் போராட்ட வீரரும், தொலைநோக்கு சிந்தனையாளரும், காலத்தால் அழியாத தனது எழுத்துகளால் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தியவருமான சுப்பிரமணிய பாரதியாரை அவரது பிறந்தநாளில் நினைவு கூர்கிறேன்.

இனிய தெலுங்கு மெல்லிசைகளைப் பாடி, வணிகப் படகுகளில் பயணம் செய்து, கங்கையின் கோதுமையை காவேரியின் பொக்கிஷங்களுக்காக பரிமாறுவோம் என்று பாரதியார் கற்பனை செய்த இந்திய தேசிய ஒருமைப்பாட்டை நாம் போற்றி கொண்டாடுவோம்.

இவ்வாறு பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

மதுரை கொடிக்கம்ப விவகாரம்:

# வி.சி.க. நிர்வாகிகள் மீது வழக்குப்பதிவு

**மதுரை, டிச. 12-**

மதுரையில் வி.சி.க. கொடிக்கம்ப விவகாரத்தில் வருவாய்த்துறை அதிகாரிகளை தாக்கியதாக புகார் அளிக்கப்பட்ட நிலையில் வி.சி.க. நிர்வாகிகள் மீது 8 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதியப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், சத்திரபட்டி அருகிலுள்ள வெளிச்சநத்தம் கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில், சுமார் 45 அடி கொடி மரம் நடப்பட்டு, அக்கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் கொடியை ஏற்றி வைக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு முறையாக அனுமதி பெறவில்லை என கூறி வருவாய்த் துறையினர் ஆட்சேபம் தெரிவித்தனர். இது தொடர்பாக கடந்த 6-ம் தேதி இரவு வருவாய்த் துறையினர், வி.சி.க.வினர் இடையே தகராறு ஏற்பட்டது. வி.சி.க.வினர் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இதன்பின், வருவாய்த்துறையினர் , காவல் துறையினர் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினருடன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து சுமார் 45 அடி கொடி மரத்தில் வி.சி.க. கட்சி கொடி ஏற்ற வருவாய்த்துறையினர் அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி, டிச 7-ம் தேதி கொடியேற்று நிகழ்ச்சி நடந்தது. கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கட்சி கொடியை ஏற்றி வைத்தார்.

இதற்கிடையில் வருவாய்த் துறையினரை தாக்கியவர்கள் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்கவேண்டும், வருவாய்த் துறையினர் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவாய்த் துறை அலுவலர்கள் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த சூழலில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 45 அடி கொடிமரம் நடுவதை தடுக்க தவறியதாகவும், கம்பத்தில் கூடுதல் அடி உயரத்திற்கு அனுமதி மற்றும் உயர் அதிகாரிகளுக்கு முறையாக முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவில்லை என காரணம் காட்டியும் மதுரை சத்திரபட்டி உட்வட்ட வருவாய் அலுவலர் அனிதா, வெளிச்சநத்தம் கிராம நிர்வாக அலுவலர் (பொறுப்பு) பரமசிவம், காவனூர், வெளிச்சநத்தம் கிராம நிர்வாக உதவியாளர் பழனியாண்டி ஆகிய மூவரையும் பணியிடை நீக்கம் செய்து முறையே கோட்டாட்சியர் சாலினி, வருவாய் அலுவலர் சக்திவேல், தாசில்தார் உத்தரவிட்டிருந்தனர்.

மதுரையில் கொடிக்கம்ப விவகாரம் தொடர்பாக விசாரிக்க சென்ற துணை வட்டாட்சியர்உள்ளிட்ட அதிகாரிகளை தாக்கியதாக வி.சி.க.-வினர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வி.ஏ.ஓ. பரமசிவம் அளித்த புகாரின் பேரில் சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் 5 வி.சி.க. நிர்வாகிகள் உள்பட 21 பேர் மீது 8 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# 500 தாழ்தள மின்சார பஸ்கள் வாங்க டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு

**சென்னை, டிச. 12-**

சென்னை, மதுரை, கோவைக்கு 500 தாழ்தள மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்வது தொடர்பான டெண்டர் அறிவிப்பை போக்குவரத்து துறை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக சாலை போக்குவரத்து நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

தமிழகத்தின் பிரதான நகரங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்துகளை இயக்கும் வகையில் கே.எஃப்.டபிள்யு வங்கியுடன் தமிழக அரசு நிதி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதன்படி, 12 மீட்டர் நீளம் கொண்ட குளிர்சாதன வசதி மற்றும் குளிர்சாதன வசதியில்லாத தாழ்தள மின்சார பேருந்துகளைக் கொள்முதல் செய்து வழங்க சர்வதேச அளவில் அழைப்பு விடுக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் தேர்வாகும் நிறுவனங்களே 500 தாழ்தள மின்சார பேருந்துகளை தயாரித்து வழங்குவதோடு, இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையில் நிறுவனங்கள் தரப்பிலான ஒட்டுநர்களே பேருந்தை இயக்க வேண்டும்.

இதில் விருப்பமுள்ள நிறுவனங்கள், இணையவழியில் பிப்ரவரி 5-ம் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து பிப்ரவரி 7-ம் தேதிக்குள் காகித வடிவிலான விண்ணப்பங்களை அளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதளத்தை காணலாம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

500 மின்சார பேருந்துகளில் சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு 320 குளிர்சாதன பேருந்துகளும், கோவைக்கு 20 குளிர்சாதனம், 60 குளிர்சாதன வசதியில்லா பேருந்துகளும், மதுரைக்கு 100 குளிர்சாதன வசதியில்லா பேருந்துகளும் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மரம் மனிதனின் உரம்

# வடிவேலுக்கு எதிராக அவதூறு கருத்துகளை கூற மாட்டேன்

## கோர்ட்டில் நடிகர் சிங்கமுத்து உத்தரவாதம்

**சென்னை, டிச. 12-**

நடிகர் வடிவேலுக்கு எதிராக எந்த அவதூறு கருத்துகளையும் தெரிவிக்க மாட்டேன் என்று கோர்ட்டில் நடிகர் சிங்கமுத்து உத்தரவாதம் அளித்துள்ளார்.

நடிகர் வடிவேலு, சிங்கமுத்து இடையே நிலப்பிரச்னை தொடர்பான வழக்கு கோர்ட்டில் நிலுவையில் இருக்கும் சூழலில், சிங்கமுத்து நடிகர் வடிவேலு ரூ.5 கோடி கேட்டு மானநஷ்ட வழக்கு தொடர்ந்தார்.

அதில் தம்மை பற்றி அவதூறாக சமூக வலைதளங்களில் சிங்கமுத்து பேசுவதாகவும், அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கோரி இருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, சிங்கமுத்து தொடர்ந்து அவதூறாக பேசுவதாக வடிவேலு தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது. அதற்கு சிங்கமுத்து தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களை கேட்ட ஐகோர்ட், வடிவேலு குறித்து அவதூறாக பேசக்கூடாது, அதற்கான உத்தரவாத மனு தாக்கல் செய்யவேண்டும். சமூக வலைதளங்களில் உள்ள அவதூறு வீடியோக்களை நீக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந் நிலையில், ஐகோர்ட் உத்தரவுப்படி, வடிவேலு குறித்து அவதூறு பேச மாட்டேன் என்று உத்தரவாதம் அடங்கிய மனு ஒன்று சிங்கமுத்து தரப்பில் ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட ஐகோர்ட், வழக்கு விசாரணையை ஜனவரி 21-ம் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

தன் மீதான அவதூறு கருத்துகளை நீக்கக்கோரி

# சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்து ராகுல் காந்தி பேச்சு

**புதுடெல்லி, டிச. 12-**

சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்துப் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தனக்கு எதிரான அவதூறான கருத்துக்களை நீக்குமாறும், அவை சுமூகமாக நடப்பதை உறுதிப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்தார்.

இந்த சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் ராகுல் காந்தி கூறியதாவது,

நான் சபாநாயகரைச் சந்தித்தேன். என் மீதான அவதூறான கருத்துக்களை அகற்ற வேண்டும் என்று எங்கள் கட்சி கூறுகிறது என்று நான் அவரிடம் சொன்னேன். சபாநாயகர் அவற்றை ஆய்வு செய்வதாக கூறினார்.

அவர்கள் (பா.ஜ.க.) அனைத்து வகையான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் தொடர்ந்து கூறுகிறார்கள். ஆனால் நாங்கள் சபை செயல்பட வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம். அவர்கள் எப்படி ஆத்திரமூட்டினாலும் நாங்கள் அவர்களை அனுமதிப்போம்.

அதே நேரத்தில், சபையை நடத்த நாங்கள் முயற்சிப்போம். சபை செயல்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். விவாதமும் கருத்துப் பரிமாற்றமும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

வரும் 13-ம் தேதி அன்று அரசியலமைப்பு மீதான விவாதம் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அதானி பிரச்சினை குறித்த விவாதத்தை அவர்கள் விரும்பவில்லை. அதானி பிரச்சினையிலிருந்து திசைதிருப்ப விரும்புகிறார்கள். எனினும், நாங்கள் அவர்களை விட மாட்டோம் என்று கூறினார்.

தொடர்ந்து காங்கிரஸ் தலைமைக்கும் அமெரிக்க கோடீஸ்வரர் ஜார்ஜ் சோரஸுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக பா.ஜ.க. முன்வைக்கும் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு பதில் அளித்த ராகுல் காந்தி,

அவர்கள்(பா.ஜ.க.) தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன்வைப்பார்கள். அவர்கள் என்ன குற்றச்சாட்டுகளை வைத்தாலும், நாடாளுமன்றம் செயல்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

எனக்கு எதிராக அவர்கள் என்ன குற்றச்சாட்டை முன் வைத்தாலும் அதை விட்டு விடுங்கள். சபையை நடத்துவது எங்கள் பொறுப்பு அல்ல என்றாலும், சபை 100 சதவீதம் செயல்பட நாங்கள் ஒத்துழைப்போம் என்று கூறினார்.

# கெஜ்ரிவால் ஜாமீனுக்கு எதிரான வழக்கு: ஜன. 17-ல் விசாரணை

**புதுடெல்லி, டிச. 12-**

கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கப்பட்டதை எதிர்த்து டெல்லி ஐகோர்ட்டில் அமலாக்கத்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஜனவரி 17-ம் தேதி டெல்லி ஐகோர்ட்டில் விசாரணைக்கு வர உள்ளது.

டெல்லி முதல்வராக இருந்த அரவிந்த் கெஜ்ரிவால் மாநில அரசின் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் அமலாக்கத்துறையால் கடந்த மார்ச் 21-ம் தேதி கைது செய்யப்பட்டார். திகார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கெஜ்ரிவாலை ஊழல் வழக்கில் கடந்த ஜுன் 26-ம் தேதி சிறையில் வைத்தே சி.பி.ஐ. கைது செய்தது.

அதே வேளை, இந்த வழக்குகளில் தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி கெஜ்ரிவால் டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அவருக்கு ஜாமீன் மறுக்கப்பட்ட நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்தார். அந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு கடந்த ஜுலை 12-ம் தேதி கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கியது.


இதையடுத்து, கடந்த ஜுலை 13-ம் தேதி திகார் சிறையில் இருந்து கெஜ்ரிவால் விடுதலையானார். இந்நிலையில், மதுபான கொள்கை முறைகேட்டில் பதியப்பட்டுள்ள பணமோசடி வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கப்பட்டதை எதிர்த்து டெல்லி ஐகோர்ட்டில் அமலாக்கத்துறை சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு அடுத்த ஆண்டு ஜனவரி 17-ம் தேதி டெல்லி ஐகோர்ட்டில் விசாரணைக்கு வர உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழகம் முழுவதும், அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து மக்களுக்கும் போதுமான கட்டமைப்பு இருக்கும்படி, மருத்துவ வசதிகளையும், மருத்துவர் எண்ணிக்கைகளையும் தமிழக அரசு பரவலாக்க வேண்டும். பொதுமக்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் தமிழக சுகாதாரத் துறையைச் அரசு உடனே சீரமைக்க வேண்டும்.

- அண்ணாமலை



மாதம் ரூ.12,500 மட்டுமே ஊதியமாகப் பெறும் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிலைப்பு கோரி போராடுகின்றனர், இன்னொருபுறம் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊதியம் மறுக்கப்படுகிறது. ஆனால், தமிழக ஆட்சியாளர்களோ, இவை குறித்த எந்தக் கவலையும் இல்லாமல் ஒட்டுமொத்த தமிழ்நாடும் மகிழ்ச்சியாக இருப்பது போன்ற மாயையை ஏற்படுத்த முனைகின்றனர்.

- அன்புமணி



சுயநலத்திற்காகவும், கூட்டணி தர்மத்திற்காகவும் மாநில உரிமைகளையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் மீண்டும் ஒரு முறை அடகு வைக்காமல், முதல்வரின் கேரள பயணத்தை பயன்படுத்தி முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் நல்ல முடிவோடு தமிழகம் திரும்ப வேண்டும். அவரின் பயணம் தென்மாவட்ட மக்களுக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும்.

- டி.டி.வி.தினகரன்



மழை, புயல் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும் நிவாரணத்தை ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும். விவசாயம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரத்து 500 நிவாரணம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

- முத்தரசன்

# குந்தா கோத்தகிரி மக்கள் தொடர்பு முகாமில் ரூ.49.25 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்

**ஊட்டி, டிச.12-**

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம், பிக்கட்டி பேரூ ராட் சிக் குட் பட்ட குந்தா கோத்தகிரி மைதானத்தில் நேற்று *(11.12.2024)* நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு 59 பயனாளிகளுக்கு ரூ.49.25 இலட்சம் மதிப்பில், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்து, அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, பொதுமக்கள் இருக்கும் இடத்திற்கே அரசு அலுவலர்கள் நேரடியாக சென்று இது போன்ற முகாம்கள் நடத்தி, பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று கொள்வதோடு, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருவது தான் இம்மனுநீதி நாள் முகாமின் நோக்கமாகும்.

அதன்படி இன்று நடைபெற்ற இம்முகாமில், மாவட்ட கலெக்டர் தமிழ்நாடு மாநில ஊரகம் மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவி குழு கடன் வழங்கும் திட்டத்தின்கீழ், 2 குழுவிற்கு ரூ.25 இலட்சம் மதிப்பில்



தொழில் தொடங்க கடனுதவிகளும், மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில், 20 பயனாளிகளுக்கு

ரூ.12 இலட்சம் மதிப்பில் கூட்டு பொறுப்புக் குழு கடனுதவிகளும், மாவட்ட முன்னோடி வங்கி சார்பில், 3 பயனாளிகளுக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவிகளும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.2,000- மதிப்பில் பண்ணை உபகரணங்களும், 1 பயனாளிக்கு ரூ.20,000- மதிப்பில் பரப்பு விரிவாக்கம் - காய்கறிகளும்,

3 பயனாளிகளுக்கு ரூ.73,863- மதிப்பில் தெளிப்பு நீர் பாசன கருவிகளையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ்

5 பயனாளிகளுக்கு ரூ.5,000- மதிப்பில் மருந்து பெட்டகங்களையும், 5 பயனாளிகளுக்கு ரூ.10,000- மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், 12 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின்கீழ், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.2.32 இலட்சம் பெறுவதற்கான ஆணைகளையும், 2 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.7,500- பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.25,000- மதிப்பில் புதிய குடும்ப அட்டைகள் என மொத்தம் 59 பயனாளிகளுக்கு ரூ.49.25 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இது போன்று தொடர்ந்து தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருவதால், அத்திட்டங்களை பொதுமக்கள் அறிந்து, பயன் பெற வேண்டும் எனவும், இப்பகுதியில் குடும்ப அட்டை, சாதி சான்றிதழ்கள் உள்ளிட்ட அரசு சான்றிதழ்கள் பொதுமக்கள் எளிதாக பெறும் வகையில் சம்மந்தப்பட்ட துறைகளின் சார்பில் தேவைப்படும் பட்சத்தில் சிறப்பு முகாம் அமைத்து, சான்றிதழ்கள் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பேரூராட்சித்துறைகளின் மூலம் குந்தா கோத்தகிரி பகுதியில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இம்முகாமில், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஸ், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு.சத்தியநாராயணன், மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் கல்பனா, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் (பொ) திலகவதி சக்திவேல், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் திறன்மேம்பாட்டு அலுவலர் ஷாகுல் ஹமீது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் சுரேஷ்கண்ணன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (பொ) தீபா, குந்தா வட்டாட்சியர் சுமதி, பிக்கட்டி பேரூராட்சி தலைவர் சந்திரலேகா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சார்பில் கடன் பெற விரும்புவோர்கான சிறப்பு முகாம் ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட கூட்டுறவு நகர வங்கியின்பஜார் கிளையில் நேற்று நடைபெற்றது முகாமில் கிளை மேலாளர் எஸ்.சாந்தி கலந்து கொண்டுபொதுமக்களுக்கு விண்ணப்பங்களை வழங்கினார் இதில் கிளை பணியாளர் பங்கேற்றனர்.**



**ஈரோடு கோட்டை ஈஸ்வரன் பெருமாள் கோவிலில் உள்ள உண்டியல் காணிக்கைகள் எண்ணும் பணி நேற்று மேற்கொள்ளப்பட்டது**

# ஈரோடு சின்ன சேமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.10.50 லட்சம் மதிப்புள்ள பொருட்கள்




ஈரோடு டிச 12-

ஈரோடு: ஈரோடு சின்ன சேமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கு ரூபாய் 10.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது.

ஈரோடு சின்ன சேமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.இப்பள்ளிக்கு சுமார் 10.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது.மேசை நாற்காலி வழங்கிய கேன்பின் லிமிடெட் திருப்பூர் கனரா வங்கி கிளை சார்பில் பள்ளிக்கு தேவையான மேசை, நாற்காலிகள் வாங்கி கொடுக்கப்பட்டது. சித்தோடு ஆலிச்சம்பாளையம் பாக்கியம்-பழனிச்சாமி தம்பதியயினர் பள்ளி வளாகத்தில் காமராசர் கலையரங்கம் அமைத்துக் கொடுத்தனர். இரும்பு பீரோ வழங்கிய கனரா வங்கி வில்லரசம்பட்டி கிளை பள்ளிக்கு இரும்பு பீரோ வழங்கியது. பள்ளிக்கு பல்வேறு பொருட்களைநன்கொடையா வழங்கிய நன்கொடையாளர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஆசிரியர் கழக உறுப்பினர்கள், மற்றும் பள்ளி மேலாண்மை குழுவினர் கலந்து கொண்டனர். நன்கொடையாளர்கள் அனைவருக்கும் தலைமையாசிரியர் சுமதி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் நன்றியும், பாராட்டும் தெரிவித்தனர்.

ஈரோடு தலமலை கிராமத்தில் நடைபெற்ற

# மனுநீதிநாள் முகாமில் 115 பயனாளிகளுக்கு ரூ.71.18 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா வழங்கினார்

**ஈரோடு,டிச.12-**

ஈரோடு தாளவாடி வட்டம், தாளவாடி உள்வட்டம், தலமலை கிராமம், தலமலை கிராம ஊராட்சி சேவை மைய வளாகத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா 115 பயனாளிகளுக்கு ரூ.71.18 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இம்முகாமில் கலெக்டர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இந்த மனுநீதி நாள் முகாம் என்பது ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன் கிழமை ஒவ்வொரு வருவாய் கிராமத்தில் நடைபெறுகிறது. அந்த வகையில் இன்றைய தினம் (11.12.2024) தலமலை கிராமத்தில் இந்த மனுநீதி நாள் முகாம் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியில், 115 பயனாளிகளுக்கு ரூ.71.18 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து, அரசு துறைகளின் மூலம் பல்வேறு அரங்குகள் அமைக் கப் பட் டுள் ளது. எனவே பொதுமக்கள் இங்கு அமைக் கப் பட் டுள்ள அனைத்து அரங்குகளை பார்வையிட்டு, அலுவலர்கள் மூலம் எடுத்துரைக்கப்படும் அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு, தகுதியுடைய பயனாளிகள் அரசின் திட்டங்களை பெற விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். தலைமலை ஊராட்சிக்குட்பட்ட ராமரணை, காளித்திம்பம் மாவனத்தம் போன்ற குக்கிராமங்களில் தார்சாலை அமைப்பதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தற்பொழுது வனத்துறையின் அனுமதி பெற்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும்.

பெஜலட்டியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு வனத்துறையின் மூலம் போடப்பட்ட, பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பதற்கும் தற்பொழுது அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்த வகையில், பெஜலட்டியில் இருந்து இட்டரை வரை தடசலட்டி வழியாக சுமார் 4.00 கிலோ மீட்டர் நீளமுள்ள பழுதடைந்த சாலையினை



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் சீரமைப்பதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். பெஜலட்டி, இட்டரை ஆகிய கிராமங்களை இணைக்கக்கூடிய சாலை விரைவில் அமைக்கப்படும். அதேபோல தலமலை ஊராட்சியில் தடையில்லா மின்சாரத்திற்கு நிரந்தர தீர்வாக துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது. இடம் தேர்வு செய்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் துணை மின் நிலையம் அமையும் பொழுது, தடையில்லா மின்சாரம், குடிநீர் கிடைப்பதற்கு ஏதுவாக அமையும். ராமரணை பகுதியில் மின்கம்பங்கள் அமைப்பதற்கு வனத்துறை மற்றும் மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் பல்வேறு கிராமங்களில் தனிநபர் பட்டா, சமூக பட்டா வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் மூலம் கிராமங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. எனவே அந்தந்த கிராமங்களுக்கு தேவையான சாலை, தெரு விளக்குகள், ஜெனரேட்டர் வசதி, உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து அரசிற்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்படும். அதேபோல ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் இப்பகுதியில் பிஎஸ்என்எல் மூலம் கைபேசி டவர் அமைப்பதற்கு கணக்கீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. வனஉரிமை சட்டத்தின் கீழ் 50 உரிமை பட்டாக்கள் வழங்கப்பட்ட குக்கிராமங்களுக்கு நிரந்தர தீர்வாக குடிநீர், சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது. இதுபோல பல்வேறு பல்வேறு திட்டப்பணிகள் ஈரோடு மாவட்டத்திற்கும் குறிப்பாக தலமலை ஊராட்சிக்கும் கடந்த மூன்றாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இம்முகாமில் கலெக்டர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 45 பயனாளிகளுக்கு ரூ.51,06,240- மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் நத்தம் பட்டா, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 33 பயனாளிகளுக்கு ரூ.4,65,000- மதிப்பீட்டில் உதவித்தொகை, 17 பயனாளிகளுக்கு காலதாமத பிறப்பு பதிவு சான்று, 4 பயனாளிகளுக்கு ரூ.43,200- மதிப்பீட்டில் புதிய மின்னணு குடும்ப அட்டை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் ரூ.24,000- மதிப்பீட்டில் ஒரு பயனாளிக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தில் நலத்திட்ட உதவியும், பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாய் யோஜனா திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.8,38,871- மதிப்பீட்டில் நுண்ணீர் பாசன அமைப்பதற்கு மானியமும், வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ. 2,97,637- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், தாட்கோ சார்பில் ரூ.9,82,000- திட்ட மதிப்பில் கனரக வாகனம் வாங்குவதற்கு ஒரு பயனாளிக்கு ரூ.3,44,000- மதிப்பீட்டில் மானியத்துடன் கடன் உதவியும் என மொத்தம் 115 பயனாளிகளுக்கு ரூ.71,18,948- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.முன்னதாக, கலெக்டர் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கிடும் வகையில் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவம், கால்நடைத் துறை, வேளாண்மை - உழவர் நலத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, மகளிர் சுய உதவிக்குழு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து, இம்முகாமில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கலெக்டர் இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இம்முகாமில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ்,கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் பாஸ்கர், துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.கவிதா, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சண்முகவடிவு, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திருமதி.மரகதமணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.உமா மகேஸ்வரி, தாட்கோ மேலாளர் அர்ஜூன், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) வெள்ளியங்கிரி, துணை ஆட்சியர் (பயிற்சி) கே.சிவபிரகாசம், தாளவாடி வட்டாட்சியர் சுப்பிரமணியம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்




ஊட்டி, டிச.12-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் நேற்று (11.12.2024) நடைபெற்ற நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணியினை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து, துவக்கி வைத்தார்.

2024-2025 ஆம் ஆண்டிற்கான உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு, மாவட்ட அளவிலான நுகர்வோர் விழா, கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மூலம் கொண்டாடப்படும் என சட்டப்பேரவையில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சரால் அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து, நேற்று நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணியானது மாவட்ட கலெக்டர் துவங்கி, சேரிங்கிராஸ் தேவாங்கர் திருமண மண்டபம் சென்று நிறைவடைந்தது. இதில் ஊட்டி அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவியர்கள், நுகர்வோர் பாதுகாப்பு சங்க நிர்வாகிகள் என சுமார் 250-க்கும் மேற்பட்டோர் 'லேபிள்களை கவனிப்போம் - தரமான பொருளை வாங்குவோம்' 'பசுமைக்குச் செல்வோம் - சுற்றுச்சூழலைக் காப்பாற்றுவோம்' உள்ளிட்ட பல்வேறு நுகர்வோர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந் நிகழ் வின் போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் குணசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், வட்ட வழங்கல் அலுவலர்கள், உதகை நுகர்பொருள் பாதுகாப்பு சங்கத்தலைவர் அர்ஜுணன், பொதுச் செயலாளர் அமீர் அகமது கான், பொருளாளர் அஸ்மத்கான், கோத்தகிரி நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தலைவர் நாகேந்திரன், பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன், பொருளாளர் பரமேஸ், புளூ மவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தலைவர் வாசுதேவன், பொதுச் செயலாளர் முகமது சலீம், குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தலைவர் மனோகரன் மற்றும் நுகர்வோர் சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் வணிகர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



**ஊட்டி, டிச.12-**

வணிக கட்டிடங்களுக்கு 18 சதவீத ஜிஎஸ்டி வசூலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வரிவிதிப்பை உடனே திரும்ப வலியுறுத்தியும் ஊட்டியில் நீலகிரி மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஊட்டியில் வியாபாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய, மாநில அரசுகள் இணைந்து உருவாக்கிய ஜி.எஸ்.டி. கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கடந்த அக்டோபர் மாதம் 10-ந் தேதி முதல், வணிக பயன்பாட்டிற்கு உள்ள கட்டிடங்களுக்கு கொடுக்கும் வாடகைக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சிறு வணிகர்கள், ஆண்டுக்கு ரூ.1½ கோடி வரை வியாபாரம் செய்யும் வணிகர்கள், தயாரிப்பாளர்கள், ஓட்டல் மற்றும் வரி விலக்கு உள்ள பொருள்களை மட்டும் விற்பனை செய்யும் வணிகர்கள் கடுமையாக பாதிக்கப்படுவர்.

இந்த தீர்மானத்துக்கு ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் எந்த மாநில அரசும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இதற்கு நாடு முழுவதிலும் உள்ள வணிகர்கள் தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்தநிலையில் இந்த 18 சதவீத ஜிஎஸ்டி வரிவிதிப்பை ரத்து செய்ய வலியுறுத்தி தமிழக வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் தமிழக முழுவதும் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் ஊட்டி மார்க்கெட் தபால்நிலையம் எதிரே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு நீலகிரி மாவட்ட வணிகர் சங்க தலைவர் முகமது பாரூக் தலைமை தாங்கினார். செயலாளர் குலசேகரன் வரவேற்றார். மாநில துணை தலைவர் தாமஸ், மாநில இணை செயலாளர்கள் ராஜா முகமது, கூடலூர் ரசாக் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட வியாபாரிகள் கூறுகையில், வாடகை மீதான ஜி.எஸ்.டி. வரியால் வணிகர்களுக்கு மேலும் பெரிய சுமை ஏற்படும். இதனால் இந்த 18 சதவீத ஜி.எஸ்.டி. வரி விதிப்பை மத்திய அரசு உடனே திரும்ப பெற வேண்டும், மாநில அரசு ஆண்டுதோறும் 6 சதவீதம் கூடுதல் சொத்து வரி விதிப்பை திரும்ப பெற வேண்டும், மேலும் பல மடங்கு உயர்த்தப்பட்டு உள்ள சொத்து வரி, குப்பை வரி மற்றும் மின் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும், குப்பை வரியை மாநிலம் முழுவதும் ஒரே சீராக்க வேண்டும், என்றனர். முன்னதாக ஜிஎஸ்டி வரி விதிப்பை ரத்து செய்ய வலியுறுத்தி மத்திய, மாநில அரசுகளை கண்டித்து வணிகர்கள் கோஷம் எழுப்பினர். இதில் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர், கூடலூர் உள்பட பல்வேறு பகுதிகளிலிருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட பொருளாளர் லியாகத் அலி நன்றி கூறினார்.

ஜெ. எஸ். எஸ். உயர்கல்வி ஆராய்ச்சி குழுமம் சார்பில்

# சொக்கள்ளி கிராமத்தில் பெண்கள் பிரச்சினை குறித்த விழிப்புணர்வு முகாம்



ஊட்டி, டிச.12-

சொக்கள்ளி கிராமத்தில் ஜெ. எஸ். எஸ். உயர்கல்வி ஆராய்ச்சி குழுமம் மைசூர் மற்றும் மருந்தாக்கவியல் வேதியியல் துறை சார்பில் பெண்களுக்கான மாதவிடாய் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம் கடநாடு ஊராட்சிக்கு உட்பட்ட சொக்கள்ளி கிராமத்தில் ஜெ. எஸ். எஸ். உயர்கல்வி ஆராய்ச்சி குழுமம், மைசூர் மற்றும் மருந்தாக்கவியல் வேதியியல் துறை சார்பில் பெண்களுக்கான மாதவிடாய் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதனை கல்லூரி முதல்வர் எஸ். பி. தனபால் தொடங்கி வைத்தார். மருந்தாக்கவியல் வேதியியல் துறை தலைவர் முனைவர். ஆர். காளிராசன், வரவேற்புரை ஆற்றினார்.

இதில்முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மாத விடாய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர். கோமதி சுவாமிநாதன் விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை எடுத்து ரைத் தார் சி றப்பு அழைப்பாளராக உதகை ஊராட்சி ஒன்றியதலைவர் மாயன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் கெந்தொரை வக்கில் பி. சிவக்குமார், சுவிட்சர்லாந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் விஞ்ஞானி கெந்தொரை ஜெகன்நாதன் ராமன் ஆகியோர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

இதில் கல்லூரியின் ஆய்வக உதவியாளர்கள் ஜெயக்குமார், அருண்குமார், பிரதீப் குமார் மாணவர்கள் சுபிக்ஷா, சரண்யா, தேஜஸ்வினி, ஆயிஷா, ஹன்னா மற்றும் நாகர்ஜுனா கலந்து கொண்டனர். முடிவில் தமிழ் வெங்கடேசன் நன்றியுரை கூறினார். அகில இந்திய வானொலி நிலையத்தை சேர்ந்த சரவணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இதில் 70 க்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பரிசு மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# மத்திய, மாநில அரசுகளின் வணிகர் சட்டங்களை திரும்பப்பெறக்கோரி ஈரோட்டில் ஆர்ப்பாட்டம்



ஈரோடு டிச 12-

வாடகை கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் ஜிஎஸ்டி வரியை திரும்ப பெற வேண்டும். ஜிஎஸ்டியை எளிமையாக்கும் விதமாக பொருட்கள் உற்பத்தி செய்யும் இடத்தில் மட்டுமே ஜிஎஸ்டி வசூலிக்க வேண்டும். ஜியோ, டி- மார்ட் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும். ஆன்லைன் மூலம் உணவு பொருட்கள், மற்றும் மருந்து பொருட்கள் விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டும்.தமிழ்நாடு மாநில அரசு சொத்து வரியை ஆண்டு தோறும் 6 சதவீதம் உயர்த்துவதை திரும்ப பெற வேண்டும். வணிக வரி உயர்வு மற்றும் தொழில் வரி உயர்வை திரும்பப் பெற வேண்டும். மின்கட்டணம் மாதந்தோறும் வசூலிப்பதை நடைமுறை படுத்த வேண்டும் என உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஈரோடு மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு மாவட்டத் தலைவர் ஆர்.கே.சண் மு க வேல் தலைமை வகித்தார். பேரமைப்பின் மாநில கூடுதல் செயலாளர் எஸ்.ராஜசேகரன், பேரமைப்பின் கோவை மண்டல தலைவர் சூலூர் டி.ஆர்.சந்திரசேகரன் ஆகியோர் கண்டன உரையாற்றினார் ஈரோடு மாவட்ட மருந்து வணிகர்கள் சங்கத் தலைவர் வி.துரைசாமி, ஈரோடு மாவட்ட சிறு தொழில்கள் சங்கச் செயலாளர் பி.சுரேஷ், ஈரோடு மாநகர இருசக்கர வாகன பழுது பார்ப்போர் சங்கத் தலைவர் பாபு, பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் டெக்னிசியன்ஸ் அசோசியேசன் மாநிலத் தலைவர் ஆர்.கிருபானந்தா, பேரமைப்பின் ஈரோடு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.லாரன்ஸ் ரமேஷ் ஆகியோர் ஆர்ப்பாட்ட உரையாற்றினர். முன்னதாக மாநில துணைத் தலைவர் திருமூர்த்தி வரவேற்றார். இறுதியில் மாவட்ட பொருளாளர் உதயம் பி.செல்வம் நன்றி உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செய்தி தொடர்பாளர் சாதிக் பாட்சா, மாவட்ட துணை தலைவர்கள், துணைச் செயலாளர், மாநகர நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் இணைப்புச் சங்கங்களை சார்ந்த நிர்வாகிகள் மற்றும் வணிகர்கள் திரளாக கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# மைசூர் தேசிய நெடுஞ்சாலையை கடந்து ஓடிய புலியால் பரபரப்பு: வாகன ஓட்டிகள் அதிர்ச்சி

ஈரோடு டிச.12

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, புலி, சிறுத்தை, கரடி, மான், காட்டெருமை உள்பட ஏராளமான வன விலங்குகள் வசித்து வருகின்றன. குறிப்பாக திம்பம், தாளவாடி மலைப்பகுதியில் யானை, சிறுத்தைகள் நடமாட்டம் அதிகளவில் உள்ளன. புலி நடமாட்டம் அவ்வப்போது இருந்து வந்தது. புளிய பொறுத்த வரை அவை அடர்ந்த வனப் பகுதியில் வாழக்கூடிய விலங்காகும். அவ்வப்போது மலை கிராமத்துக்குள் புகுந்து கால்நடைகளை வேட்டையாடி வரும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை பண்ணாரி அடுத்த திம்பம் மலைப்பாதை முதலாவது கொண்டை ஊசி வளைவுக்கு முன் பகுதியில் வாகனங்கள் அங்குமிங்கும் சென்று வந்து கொண்டிருந்தன. அப்போது திடீரென மைசூர் தேசிய நெடுஞ்சாலையை கடந்து பிரம்மாண்ட புலி ஒன்று வேகமாக ஓடியது. புலி சாலையை கடந்து செல்லும் காட்சியை அந்த வழியாக வந்த காரில் பொருத்தப்பட்டு இருந்த கேமராவில் பதிவானது. மயிரிழையில் புலி அந்த காரில் மோதாமல் வேகமாக சாலையை கடந்தது. இல்லையென்றால் விபத்து ஏற்பட்டிருக்கும். திடீரென புலி சாலையைக் கடந்து சென்றதால் வாகன ஓட்டி அதிர்ச்சி அடைந்தார். சிறிது நேரம் அவர் வாகனத்தை ஓரமாக நிறுத்தி பின்னர் இயல்பு நிலைக்கு வந்த பின்னர் அங்கிருந்து கிளம்பி சென்றார். இந்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பண்ணாரி மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் புலி நடமாட்டம் இருப்பதால் வாகன ஓட்டிகள் கவனத்துடன் செல்ல வேண்டும் எனவும், குறிப்பாக இருசக்கர வாகனதாரர்கள் கவனத்துடன் செல்ல வேண்டும் என்றும் எக்காரணம் கொண்டும் வனப்பகுதியில் வாகனத்தை நிறுத்த வேண்டாம் எனவும் வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்பவர்களும் கவனத்துடன் இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

# ஈரோடு மாநகர் மாவட்ட அரசு போக்குவரத்து தொழிற்சங்க கொடியேற்று விழா மற்றும் பெயர் பலகை திறக்கும் நிகழ்ச்சி



ஈரோடு டிச 12-

ஈரோடு மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஐடிஐ பகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஈ-1 , ஈ.3 ஆகிய கிளைகளின் பாட்டாளி தொழிற்சங்கத்தின் கொடியேற்று விழா நேற்று நடைபெற்றது

இதில் பாட்டாளி தொழிற்சங்கத்தின் கொடியினை ஈரோடு மாநகர் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் செயலாளர் எஸ் ஆர் ராஜு ஏற்றி வைத்தார். பெயர்ப்பலகையை மாநிலத் துணைத் தலைவர்கள் எஸ் எல் பரமசிவம் எம்பி வெங்கடாசலம் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மாநகர் மாவட்ட தலைவர் அ.பிரபு, பாமக வடக்கு மாவட்ட செயலாளர் ஜெகதீஷ், பாமக வடக்கு மாவட்ட தலைவர் பசுமைத்தாயகம் ராஜேந்திரன் ஆகியோர் தொழிற்சங்க பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பாட்டாளி தொழிற்சங்க மண்டல தலைவர் பெ.அருள்குமார் வரவேற்புரை ஆற்றினார், மண்டல செயலாளர் ப. முருகேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாட்டாளி தொழிற்சங்க கௌரவ தலைவர் கு.குருசாமி, கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியினர் கலந்து கொண்டனர்.கிளைச்சங்க செயலாளர் எ..சீனிவாசன் நன்றி கூறினார்.

# தூபகண்டியில் நடைபாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த வேலியை அகற்றியதால் பரபரப்பு

ஊட்டி, டிச.12-

தூபகண்டியில் நடைபாதையை ஆக்கிரமித்து அமைக் கப் பட் டி ருந்த வேலியை பொதுமக்களே அகற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது.

நீலகிரி மாவட்டம் சோலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட தூபக்கண்டி, சேலக்கல் கிராமங்களில் சுமார் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள குழந்தைகள் அருகில் உள்ள கோக்கால் அரசு பள்ளியில் படித்து வருகின்றனர்.

தூபகண்டி மக்கள் ஊரில் உள்ள தனியார் நிலத்தில் உள்ள பாதையை பல ஆண்டு காலமாக பயன்படுத்தி வந்தனர். இதற்கிடையே சோலூர் பேரூராட்சி சார்பில் கடந்த 2013-ம் ஆண்டு மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.60 லட்சம் செலவில் தடுப்பு சுவருடன் 300 மீட்டருக்கு மண் பாதையாக இருந்ததை சிமெண்ட் நடைபாதையாக மாற்றப்பட்டது.

இதில், சுமார் 50 மீட்டர் அளவில் தனியார் பட்டா நிலங்கள் இடையே நடைபாதை செல்வதால், மக்கள் பயன்பாட்டுக்காக என்பதால் தனியார் நில உரிமையாளர்கள் நடைபாதைக்காக தங்கள் நிலங்களை கொடுத்துள்ளனர்.

இந்தநிலையில், தற்போது அந்த பகுதியில் தனியார் நில உரிமையாளர் ஒருவர் சோலூர் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அமைத்த நடைபாதையை ஆக்கிரமித்துடன், மக்கள் பயன்படுத்த முடியாத வகையில் இரும்பு கம்பியில் தடுப்பு வேலி அமைத்துள்ளார்.

இதுகுறித்து ஊர் மக்கள் மற்றும் அந்த தனியார் இடத்தின் உரிமையாளரிடையே தகராறு ஏற்பட்டது. இதையடுத்து தனியார் உரிமையாளர் இது குறித்து கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். முதலில் பொதுமக்கள் தரப்பில் யாரும் சரிவர ஆஜராகாததால், தனியாருக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததாக தெரிகிறது.

இந்தநிலையில் ஊர் மக்கள் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதில் தனியார் தரப்பில் யாரும் ஆஜராகாததால், வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்ததாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து கிராம மக்கள், பெண்கள் ஆகியோர் சேர்ந்து நேற்று தனியார் சார்பில் அமைக்கப்பட்ட இரும்பு தடுப்பு வேலியை திடீரென அகற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் அங்கு பொதுமக்களுக்கும் தனியார் உரிமையாளர் தரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு பிரச்சனை ஏற்படும் சூழல் உருவானதால், போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

இதுகுறித்து ஊர் பொது மக்கள் கூறியதாவது:-

தூபக்கண்டியில் உள்ள நடைபாதை 1933-ம் ஆண்டு முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதனால் 2013-ம் ஆண்டு பேரூராட்சி நிர்வாகம் சார்பில் சிமெண்ட் பாதையாக அமைத்து கொடுக்கப்பட்டது. ரேஷன் கடை, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பள்ளிக்கு செல்ல இது முக்கியமான பாதையாக உள்ளது.

இந்தநிலையில், கடந்த 2020-ம் ஆண்டு அந்த பகுதியில் தனியார் ஒருவர் நிலத்தை வாங்கி, நடைபாதையை ஆக்கிரமித்து வேலி அமைத்து விட்டார். இதனால், மக்கள் நடைபாதையை ஒட்டியுள்ள சிறிய இடத்தை பயன்படுத்தி வந்தனர். இதற்கிடையே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால் இது குறித்து வருவாய்த் துறையினருக்கு தகவல் தெரிவித்தோம். ஒரு நாள் முழுவதும் காத்திருந்தும் வருவாய் துறையினர் நடவடிக்கை எடுக்காததால், தற்போது நடைபாதை ஆக்கிரமிப்பை பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து அகற்றி விட்டனர். இவ்வாறு கூறினர்.

# அமேசான் இந்தியா மின்சார கனரக சரக்கு வாகனங்கள் சோதனை துவக்கம்

கோவை , டிச 12-

இந்திய டெலிவரி பிரிவில் 10,000 எலக்ட்ரிக் வாகனங்களை அடையும் இலக்கை வெற்றிகரமாக எட்டியதாக அமேசான் இன்று அறிவித்தது. அதுவும், 2024 அக்டோபரில் திட்டமிட்டதை விட ஒரு வருடத்திற்கு முன்னதாக அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அமேசான் தனது லாஜிஸ்டிக் பிரிவில் டிகார்பனைஸ் செய்வதில் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும் 350 கிமீ பெங்களூரு-சென்னை நெடுஞ்சாலையில் நீண்ட தூர மின்சார கனரக டிரக்குகளை சோதனை செய்யும் முதல் இ-காமர்ஸ் நிறுவனம் எனும் பெருமையும் சேர்ந்துள்ளது. இந்தத் திட்டம், அமேசான், அசோக் லேலண்ட், பில்லியன்-இ மற்றும் சார்ஜ்ஜோன் உள்ளிட்ட தொழில்துறை தலைவர்களை ஒன்றிணைத்து நீண்ட தூர மின்சார சரக்கு போக்குவரத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்கிறது. அமேசான் இந்தியா நிறுவனத்தின் துணைத் தலைவர் அபினவ் சிங் பேசுகையில், “எங்கள் லாஜிஸ்டிக் பிரிவில் 10,000க்கும் மேற்பட்ட மின்சார வாகனங்கள் இருப்பதும், நீண்ட தூர மின்சார லாரிகளை வெற்றிகரமாகச் சோதிப்பதும் அமேசான் நிறுவனத்தில் நாங்கள் பெருமிதம் கொள்ளும் சாதனைகள். ஒரு நிறுவனமாகவும், ஒரு நாடாகவும், இந்தியாவின் நிகர-பூஜ்ஜிய இலக்குகளை அடையவும், டீசல் சரக்குகளை நம்பியிருப்பதைக் குறைக்கவும் நாம் பூஜ்ஜிய டெயில்பைப் மாசு உமிழ்வு டிரக்குகளுக்கு மாற வேண்டும். லாஜிஸ்டிக்ஸ் துறை இன்னும் வரையறுக்கப்பட்ட சார்ஜிங் உள்கட்டமைப்பு மற்றும் வரம்பு கவலையை எதிர்கொள்கிறது, மேலும் தீர்வுகளைக் கண்டறிய அரசாங்கம் மற்றும் தொழில்துறையின் முக்கிய வீரர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வால்வோ ஐச்சர், டாடா மோட்டார்ஸ், மஹிந்திரா எலக்ட்ரிக், அசோக் லேலண்ட் மற்றும் ஆல்டிகிரீன் போன்ற முன்னணி உற்பத்தியாளர்களுடன் இணைந்து அமேசான் தனிப்பயன் எலக்ட்ரிக் வாகனங்களை உருவாக்கியுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி 3-வது வார்டில் அமைந்துள்ள அம்மா சிறுவர் பூங்காவை சீரமைக்க கோரி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி தலைவர் அப்துல் ரஷித் ஆகியோரிடம் தமிழக வெற்றி கழக நகர தலைமை சார்பாக மனு அளிக்கப்பட்டது.



காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட காந்தி நகரில் உள்ள ரேஷன் கடையில் விற்பனைக்காக வைக்கப் பட்டுள்ள பொருட்கள் எந்த நிலையில் உள்ளது, இருப்பு எவ்வளவு இருக்கிறது என்ற விவரங்களை, மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஈரோடு அகஸ்தியர்வீதியில்

# காச நோய் ஸ்மார்ட் ஈரோடு இயக்கம் மற்றும் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம்



ஈரோடு டிச 12-

ஈரோடு மாநகராட்சியில் அகஸ்தியர் வீதி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் இல்லா ஈரோடு இயக்கத்தின் கீழ் தீவிர காச நோய் கண்டுபிடிப்பு மற்றும் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது. ஈரோட்டில் கடந்த 7-12-2024 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் துவக்கி வைக்கப்பட்டு, துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலரின் ஆலோசனைப்படி காச நோய் இல்லா ஈரோடு இயக்கத்தின் கீழ தீவிர காச நோய் கண்டுபிடிப்பு முகாம் மற்றும் காச நோய் ,புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் காச நோய் பரவும் விதம், நுரையீரல் காச நோயின் அறிகுறிகள் அதன் பாதிப்புகள், காச நோய்க்கான இலவச பரிசோதனை மற்றும் சிகிச்சை கிடைக்கும் இடங்கள், காச நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியவர்கள், புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள், புற்றுநோய் பாதிப்புகள், இளைய சமுதாயத்தினரின் சீரழிவுகள், புகையிலை தடுப்புச் சட்டங்கள், புகையிலை பழக்க மீட்பு ஆலோசனை குறித்து விளக்கமாக சுகாதார நலக்கல்வி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் அலுவலக மாவட்ட நலக்கல்வியாளர் சிவகுமார், மாவட்ட சுகாதார அலுவலக மாவட்ட புகையிலை தடுப்பு பிரிவு சமூக சேவகர் சங்கீதா, மருத்துவ அலுவலர் சங்கரநாராயணன், காசநோய் முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் ஹரிஹரன், காச நோய் சுகாதார பார்வையாளர் ஜெகன், சுகாதார ஆய்வாளர் பவித்ரன், நடமாடும் எக்ஸ்ரே ஊர்தி குழுவினர், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் 75 பேர்கள் கலந்து கொண்டனர். இந்த முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு நடமாடும் எக்ஸ்ரே ஊர்தி குழுவின் மூலமாக மார்பக ஊடுகதிர் பரிசோதனை மற்றும் சளி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கிரேட் காளி நடித்துள்ள நகைச்சுவையான பாக் குக்கீ பாக்விளம்பரம் அறிமுகம்

கோவை , டிச.12-

கிராப்டன் இந்தியா, தேவ் சிஸ்டர்ஸ் உடன் இணைந்து, அதன் சமீபத்திய கேஷுவல் ரன்னர் மொபைல் கேமான குக்கீரன் இந்தியாவை விளையாட்டு ஆர்வலர்கள் ஆன்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் ஸ்மார்ட் போன்களில் பதிவிறக்கம் செய்யலாம் என்று அறிவித்துள்ளது. இது குறித்து கிராப்டன் இந்தியா வெளியீட்டு பிரிவு தலைவர் மினு லீ கூறுகையில், இந்திய பார்வையாளர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த கேம், அனைவருக்கும் பிடித்தமான குலாப் ஜாமூன் மற்றும் காஜு கத்லி குக்கீகள் உட்பட, இந்திய இனிப்புகள் போன்ற தனித்துவமான கதாபாத்திரங்களைக் கொண்டுள்ளது. மேலும் இது சிறிய தப்லா மற்றும் கிளி தாதா போன்ற செல்லப்பிராணிகளையும், இந்திய வரைபடம் என ஏராளமான சுவாரஸ்யங்களைக் கொண்டுள்ளது. இந்த கேம் விளையாடுபவர்களுக்கு வேடிக்கையான மற்றும் அதிவேக அனுபவத்தை வழங்குகிறது, அங்கு வீரர்கள் ‘குக்கீ’ கேரக்டரைத் தேர்ந்தெடுத்து, குதித்தும் சறுக்கியும் விளையாடி பாயிண்ட்களை சேர்க்கலாம். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ரசிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கேம், வேடிக்கையாக இருக்க லீடர்போர்டு உட்பட பல்வேறு அம்சங்களையும் கொண்டுள்ளது. இந்த கேம் இதுவரை 10 லட்சம் முன்பதிவுகளை கடந்துள்ளது. இந்த கேமை பிரபலப்படுத்த இந்தியாவின் மிகச்சிறந்த மல்யுத்த ஜாம்பவான்களில் ஒருவரான தி கிரேட் காளி நடித்துள்ள‘பாக் குக்கீ பாக்’ என்னும் டிஜிட்டல் விளம்பரமும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஒரு வேடிக்கையான தருணத்தில், காளி தான் ஓடத் தொடங்கப் போவதாக அறிவித்து அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்துகிறார். இதைப் பார்த்து மக்கள் ஆச்சரியப்படுகின்றனர். அப்போது காளி குக்கீரன் இந்தியாவில் இருக்கிறார் என்பது தெரியவரும்போது குழப்பம் ஒருவழியாக முடிவுக்கு வருகிறது. இந்த கேமின் எளிதான கேம்ப்ளே, அற்புதமான சவால்கள் மற்றும் சுவாரஸ்யங்கள் ஆகியவை மொபைல் கேமின் வண்ணமயமான வசீகரத்துடன் காளியின் வாழ்க்கையை விட பெரிய ஆளுமையின் இந்த கற்பனையான தோற்றம் வெளியீட்டை உண்மையிலேயே மறக்க முடியாததாக ஆக்குகிறது. அத்துடன் ஒரு கவர்ச்சியான ஜிங்கிள், ‘ஓ குக்கீ ரன் ரன் ரன்,’ இது ஒவ்வொரு காட்சியையும் ரம்மியமாக்குகிறது.இந்த விளம்பரம் முடிந்த நீண்ட நேரம் கழித்தும் பார்வையாளர்களை இது முணுமுணுக்க வைக்கிறது.

# ஐயப்பன்தாங்கல் பகுதியில் அடுத்தடுத்து இருவருக்கு வெட்டு

சென்னை டிச 12-

: ஐயப்பன்தாங்கல் தெள்ளியார் அகரம் பகுதியை சேர்ந்தவர் தமிழ் (23). இவர், தெள்ளியார் அகரம் சாலையில் நேற்று முன்தினம் இரவு தனது நண்பர்களுடன் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது 5 பைக்குகளில் வந்த 10க்கும் மேற்பட்டோர், தமிழை அரிவாளால் சரமாரியாக வெட்டினர். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்தார்.

இதையடுத்து அங்கிருந்து தப்பிச் சென்ற அந்த கும்பல், அந்த வழியாக நடந்து சென்று கொண்டிருந்த வடமாநிலத்தைச் சேர்ந்த சூர்யா (25) என்பவரையும் தலையில் வெட்டியது.மேலும் அந்த சாலையில் நின்று இருந்த கார் மற்றும் இரு சக்கர வாகனங்களையும் அடித்து நொறுக்கினர். பின்னர் அந்த கும்பல் அரிவாளை காட்டியவாறு, பொதுமக்களை அச்சுறுத்தி அங்கிருந்து தப்பியது. இதற்கிடையே ரத்த வெள்ளத்தில் சரிந்த தமிழை அக்கம் பக்கத்தினர் மீட்டு போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கே அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.இதேபோல், தலையில் வெட்டு காயம்பட்ட சூர்யாவும் போரூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணையில், தமிழுக்கும் காட்டுப்பாக்கத்தை சேர்ந்த சபரி என்பவருக்கும் இடையே ஏற்பட்ட முன் விரோதம் இருந்து வந்தாக கூறப்படுகிறது. அதன் காரணமாக சபரி தனது நண்பர்களுடன் வந்து தமிழை வெட்டி கொலை செய்ய முயன்றது தெரியவந்துள்ளது.

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
உதகமண்டலம்
திரு ஜான் சில்வஸ்டர்,
த.பெ. ஜான் குருஸ்(லேட்),
12A/8, சித்தா மேஸ்திரி லைன்,
காந்தள், ஊட்டி,
நீலகிரி மாவட்டம்.
-----மனுதாரர்
எதிர்
ஆணையாளர் அவர்கள்
உதகமண்டலம் நகராட்சி.
-------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது தகப்பனார் ஜான் குருஸ், த.பெ.பாக்கியநாதன் கடந்த 28.06.2017 அன்று க.எண். 949/B5, கப்பினி கவுடர் லைன், காந்தள், ஊட்டி, நீலகிரி மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். அவரது இறப்பினை இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்போது அவரது இறப்பு சான்றிதழ் கேட்டு ஊட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 10 நாட்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
ஜான் சில்வஸ்டர்,
மனுதாரர்.

### ஐ.சி.சி. டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை:

# பந்துவீச்சாளர்களில் ஜஸ்ப்ரிட் பும்ரா, ஆல்ரவுண்டர்களில் ஜடேஜா முதலிடம்

**துபாய், டிச. 12-**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆண்களுக்கான டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை நேற்று வெளியான நிலையில், பேட்ஸ்மேன்கள் பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். அதே போல் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்திய வீரர் ஜஸ்ப்ரிட் பும்ராவும், ஆல்ரவுண்டர்கள் பட்டியலில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவும் முதலிடம் பெற்றுள்ளனர்.



ஆண்களுக்கான...

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆண்களுக்கான டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது. அதன்படி டெஸ்ட் பேட்ஸ்மேன்கள் தரவரிசை பட்டியலில் இங்கிலாந்து இளம் வீரர் ஹாரி புரூக் (898 புள்ளி) முதல் இடத்திற்கு முன்னேறி உள்ளார். இங்கிலாந்தின் ஜோ ரூட் (897 புள்ளி) ஒரு இடம் சரிந்து 2வது இடத்திற்கு வந்துள்ளார்.

**ஜெய்வால் 4-வது...**

இந்த பட்டியலில் நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் (812 புள்ளி) 3வது இடத்திலும், இந்தியாவின் யஷஸ்வி ஜெய்ஸ்வால் (811 புள்ளி) 4வது இடத்திலும் உள்ளனர். ஆஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் (781 புள்ளி) 6 இடங்கள் உயர்ந்து 5வது இடத்திற்கு வந்துள்ளார். பேட்ஸ்மேன்கள் பட்டியலில் ரிஷப் பண்ட் (724 புள்ளி) 9வது இடத்திலும், சுப்மன் கில் (672 புள்ளி) 17வது இடத்திலும், விராட் கோலி (661 புள்ளி) 20வது இடத்திலும் உள்ளனர்.

**ஜஸ்ப்ரித் பும்ரா...**

டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ஜஸ்ப்ரித் பும்ரா (890 புள்ளி) முதல் இடத்திலும், தென் ஆப்பிரிக்காவின் ககிசோ ரபாடா (856 புள்ளி) 2வது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட் (851 புள்ளி) 3வது இடத்திலும் உள்ளனர். டெஸ்ட் ஆல்ரவுண்டர்கள் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா (415 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். வங்காளதேசத்தின் மெஹதி ஹசன் மிராஸ் (284 புள்ளி) 2 இடங்கள் உயர்ந்து 2வது இடத்திற்கு வந்துள்ளார். இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் (283 புள்ளி) 3வது இடத்தில் உள்ளார்.

### சையத் முஷ்டாக் அலி கோப்பை:

# அரையிறுதிக்கு மத்திய பிரதேசம், பரோடா, டெல்லி, மும்பை தகுதி

**பெங்களூரு, டிச. 12-**

சையத் முஷ்டாக் அலி கோப்பை அரையிறுதிக்கு மத்திய பிரதேசம், பரோடா, டெல்லி, மும்பை அணிகள் தகுதிப் பெற்றுள்ளன.

காலிறுதிக்கு....

7-வது சையத் முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் லீக் சுற்று மற்றும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களின் முடிவில் மும்பை, விதர்பா, டெல்லி, பரோடா, மத்திய பிரதேசம், சவுராஷ்டிரா, பெங்கால், உத்தரபிரதேசம் அணிகள் காலிறுதிக்கு முன்னேறின. இந்நிலையில், சையத் முஷ்டாக் அலி கோப்பை தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. இதில் நேற்று காலை நடைபெற்ற ஒரு காலிறுதி ஆட்டத்தில் சவுராஷ்டிராவை வீழ்த்தி மத்திய பிரதேசம் அரையிறுதிக்கு முன்னேறியது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த சவுராஷ்டிரா 173 ரன்கள் எடுத்தது.



பரோடா - பெங்கால்...

தொடர்ந்து 174 ரன் என்ற இலக்கை நோக்கி ஆடிய மத்திய பிரதேசம் 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து 174 ரன்கள் எடுத்து வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. அதே போல், இந்த தொடரில் நேற்று நடைபெற்ற மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் பரோடா - பெங்கால் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பரோடா 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 172 ரன்கள் எடுத்தது. பரோடா தரப்பில் அதிகபட்சமாக ஷஷ்வத் ராவத் 40 ரன்கள் எடுத்தார். தொடர்ந்து 173 ரன் என்ற இலக்கை நோக்கி ஆடிய பெங்கால் 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 131 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

ஹர்திக் பாண்ட்யா....

இதன் மூலம் பரோடா 41 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் அரையிறுதிக்கு முன்னேறியது. பரோடா தரப்பில் ஹர்திக் பாண்ட்யா, லுக்மான் மேரிவாலா, அபிஷேத் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். இன்று நடைபெற்று வரும் மற்ற காலிறுதி ஆட்டங்களில் விதர்பா - மும்பை, டெல்லி - உத்தர பிரதேசம் அணிகள் ஆடி வருகின்றன.

174 ரன்னுக்கு அவுட்...

கடைசி காலிறுதி ஆட்டத்தில் டெல்லி - உத்தரபிரதேசம அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 193 ரன்கள் குவித்தது. டெல்லி தரப்பில் அதிரடியாக ஆடிய அனுஜ் ராவத் 33 பந்தில் 73 ரன்கள் எடுத்தார். உத்தரபிரதேசம் தரப்பில் மோஷின் கான், வினித் பன்வார், நிதிஷ் ராணா ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 194 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய உத்தரபிரதேசம் 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 174 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

4வது அணியாக...

இதன் மூலம் 19 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற டெல்லி 4வது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது. இந்த தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் வரும் 13ம் தேதி பெங்களூருவில் நடக்கிறது. அரையிறுதி ஆட்டங்களில் பரோடா - மும்பை (காலை 11 மணி), டெல்லி - மத்திய பிரதேசம் (மாலை 4.30 மணி) அணிகள் மோத உள்ளன. இறுதிப் போட்டி வரும் 15ம் தேதி பெங்களூருவில் நடக்கிறது.

### உலக செஸ் சாம்பியன்ஷிப்:

# குகேஷ்-லிரென் இடையிலான 13-வது சுற்று ஆட்டம் 'டிரா'

**சிங்கப்பூர், டிச. 12-**

உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் குகேஷ்-லிரென் இடையிலான 13வது சுற்று ஆட்டம் டிராவில் முடிந்துள்ளது.



**14 சுற்றுகள்...**

தமிழகத்தைச் சேர்ந்த குகேஷ், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது. 14 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் இதுவரை 12 சுற்றுகள் முடிந்துள்ளது. இருவரும் தலா 6 புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளனர். இதில் 3-வது மற்றும் 11-வது சுற்றில் குகேசும், முதலாவது மற்றும் 12-வது சுற்றில் லிரெனும் வெற்றி பெற்றனர். மற்ற ஆட்டங்கள் 'டிரா'வில் முடிந்தது.

**கடைசி சுற்றில்...**

இந்த நிலையில் இந்த போட்டியின் 13வது சுற்று ஆட்டம் இன்று நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டமும் டிராவில் முடிந்தது. இதன் காரணமாக இருவரும் தற்போது 6.5 புள்ளிகளுடன் சமனில் உள்ளனர். இன்று கடைசி சுற்று (14வது சுற்று) ஆட்டம் நடைபெறுகிறது. நேற்று நடைபெற்ற கடைசி சுற்று ஆட்டத்தில் யாராவது வெற்றி பெற்றால் வெற்றி பெற்றவர் சாம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றுவார்.

ஒருவேளை நாளை நடைபெறும் கடைசி சுற்று ஆட்டமும் டிராவில் முடிந்தால் வரும் 13ம் தேதி டைபிரேக்கர் முறை கடைப்பிடிக்கப்படும்.

### சென்னையில் கனமழை:

# தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்த ஏழு விமானங்கள்

**சென்னை, டிச. 12-**

சூறைக்காற்றுடன் பெய்த மழையால் சென்னையில் தரையிறங்க முடியாமல் 7 விமானங்கள் வானில் வட்டமடித்தன.

தென் கிழக்கு வங்கக்கடலில் நிலவி வரும் தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக நேற்று (புதன்கிழமை) முதல் 4 நாட்களுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை தீவிரம் அடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. அதன்படி, சென்னையின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. சென்டிரல், எழும்பூர், புரசைவாக்கம், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், மெரினா, சைதாப்பேட்டை, சின்னமலை, ஈக்காட்டுத்தங்கல், அசோக் பில்லர், கிண்டி, ராயப்பேட்டை, மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவான்மியூர், அடையாறு, தரமணி, வேளச்சேரி, துரைப்பாக்கம், பாலவாக்கம்,பெருங்களத்தூர், வண்டலூர், கிளாம்பாக்கம், ஆலந்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்த காற்றுடன் கன மழை பெய்தது.

சென்னை புறநகர் பகுதிகளில் பெய்த மழையால் மதுரவாயலில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் நெற்குன்றம்- மதுரவாயல் இடையே 3 கி.மீ.க்கு வாகனங்கள் அணிவகுப்பு நின்றன. மதுரவாயல், ஆலப்பாக்கம் சிக்னலில் வாகனங்கள் நெரிசலால் பணிக்கு செல்வோர் சற்று அவதி அடைந்தனர். அதைபோல் மழை காரணமாக கத்திப்பாரா பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்த நிலையில், சென்னையில் சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்ததால் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. தோகா, மலேசியா, புவனேஸ்வர், மும்பை, டெல்லி உள்பட 7 விமானங்கள் தரை இறங்க முடியாமல் வானில் வட்டமடித்தன. சிறிது நேர போராட்டத்திற்கு பிறகு ஒன்றன் பின் ஒன்றாக தரையிறங்கின. மேலும் துபாய், சிங்கப்பூர், மதுரை, தூத்துக்குடி, துர்காபூர், டெல்லி, கோவை, சிலிகுரி, புனே விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன. டெல்லி விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால் பெங்களூருவுக்கு திருப்பி விடப்பட்டது.

இந்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் புதன்கிழமை(டிச.11) ஒரே நாளில் 7 புறப்பாடு விமானங்கள், 6 வருகை விமானங்கள் என மொத்தம் 13 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. தில்லியில் இருந்து சென்னை வந்த விமானம் மோசமான வானிலை காரணமாக தரையிறக்க முடியாததால், பெங்களூருவுக்கு திரும்பி அனுப்பப்பட்டது. தமிழகத்திற்கு ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், மோசமான வானிலை காரணமாக சென்னை-தில்லி, மங்களூரு விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

# 2031-க்குள் இந்தியாவின் அணுசக்தி உற்பத்தித்திறன் மும்மடங்காக உயரும்

### மத்திய அமைச்சர் நம்பிக்கை

**புதுடெல்லி, டிச. 12-**

இந்தியாவின் அணுசக்தி திறன் கடந்த பத்தாண்டுகளில் இருமங்காக அதிகரித்த நிலையில், 2031-க்குள் இது மூன்று மடங்காக உயரும் என்று மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் புதன்கிழமை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் குளிர்கால கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு மத்திய அமைச்சர் பதிலளித்துள்ளார். அணுசக்தித் துறை மற்றும் விண்வெளித்துறை உள்பட முக்கிய பதவிகளை வகுத்துவரும் அவர் 2014 முதல் மாற்றியமைத்த முன்னேற்றங்களைப் பற்றி அவர் தெரிவித்தார்.

பாஜக அரசு ஆட்சிக்கு வந்தபோது மொத்த மின்னுற்பத்தி திறன் 4,780 மெகாவாட்டாக இருந்தது. இன்று 2024ல் 8,081 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட திறன், முந்தைய 60 ஆண்டுகளில் எட்டப்பட்டதற்குச் சமமாக உள்ளது என்றார். 2031-32ல் உற்பத்தித் திறன் மூன்று மடங்கு அதிகரித்து 22,480 மெகாவாட்டை எட்டும். இந்த முன்னேற்றத்திற்குத் தொழில்நுட்ப நிபுணத்துவம் மட்டுமல்ல.. அரசியல் விருப்பத்தின் மாற்றமும் காரணம்.

தமிழகத்தில் மின் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் திட்டத் தாமதங்கள் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர், நியாயமான முறையில் மின்சார விநியோகங்கள் நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார். தற்போது 50 சதவீத மின்சாரம் சொந்த மாநிலத்துக்கும், 35 சதவீதம் அண்டை மாநிலங்களுக்கும், 15 சதவீதம் தேசிய மின்திட்டத்துக்கும் ஒதுக்கப்படுகிறது. மேலும் உள்நாட்டு பவினி திட்டம் தோரியம் உபயோகத்தைப் பரிசோதித்து வருகிறது, இது யுரேனியம் மற்றும் பிற இறக்குமதி பொருள்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் என்று அவர் கூறினார்.

### பர்மிங்காம் டெஸ்ட் போட்டி:

# 200 நாட்களுக்கு முன்பே விற்றுத்தீர்ந்த டிக்கெட்டுகள்

**பர்மிங்காம், டிச. 12-**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் பர்மிங்காம் டெஸ்ட் போட்டிக்கான முதல் 4 நாட்களுக்கான டிக்கெட்டுகள் 200 நாட்களுக்கு முன்னதாக விற்றுத்தீர்ந்து விட்டதாக எட்ஸ்பேஸ்டன் மைதானம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆஸ்திரேலிய அணி...**

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதும் பார்டர் - கவாஸ்கர் கோப்பைக்கான தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது. முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்ற நிலையில் 2-வது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்று 1-1 என்ற கணக்கில் இந்தத் தொடர் சமனில் இருக்கிறது. 3-வது டெஸ்ட் போட்டி சனிக்கிழமை தொடங்கும் நிலையில், இவ்விரு அணிகளும் மோதும் பாக்ஸிங் டே டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான முதல்நாள் போட்டிக்கான அனைத்து டிக்கெட்டுகளும் விற்பனையாகி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின.

**பர்மிங்காம் டெஸ்ட்..**

இந்தத் தொடரில் இந்தியா வெற்றிபெற்றால், உலக டெஸ்ட் சாம்பியன்ஸிப்பின் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும், அவ்வாறு தகுதிபெற்றால் ஜூன் மாதம் 11 ஆம் தேதி நடைபெறும் போட்டியில் விளையாடும். அதன்பின்னர், இங்கிலாந்தில் ஜூன் மாதம் 20 ஆம் தேதி லீட்ஸில் தொடங்கும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இவ்விரு அணிகள் மோதும் பர்மிங்காம் டெஸ்ட் போட்டி ஜூலை மாதம் 2 ஆம் தேதி தொடங்குகிறது.

**பட்டோடி கோப்பை...**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் இந்தத் தொடர் பட்டோடி கோப்பை என்று அழைக்கப்படுகிறது. இந்நிலையில், பர்மிங்காமின் எட்ஜ்பேஸ்டனில் நடைபெறும் போட்டிக்கான அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத்தீர்ந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த டிக்கெட்டுகள் 25 யூரோவில் இருந்து 299 யூரோ வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், 16 வயதுக்குள்பட்டோருக்கு 10 யூரோக்களாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆஷஸ் தொடர் அல்லாத, ஒரு தொடருக்கு 4 நாட்களுக்கான டிக்கெட்டுகளும், அதுவும் 7 மாதங்களுக்கு முன்னதாக விற்றுத்தீர்ந்து போவது இதுவே முதல்முறையாகும்.

**அனைத்து டிக்கெட்டுகளும்...**

இதற்கு முன்னதாக, பர்மிங்காமில் நடைபெறவுள்ள மேற்கிந்திய தீவுகளுக்கான டெஸ்ட் 3 நாள்கள் டிக்கெட்டுகளும், ஆஷஸ் தொடருக்கான 4 நாள்கள் டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன.

# டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் இன்று மத்திய அமைச்சரவை கூட்டம்

**புது டெல்லி, டிச. 12-**

டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெறுகிறது.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 25-ம் தேதி தொடங்கிய நாளில் இருந்து, அதானி லஞ்ச விவகாரத்தை எழுப்பி தினமும் பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

மேலும் பாராளுமன்ற கூட்டுக்குழு அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன. இந்த நிலையில், பிரதமர் மோடி தலைமையில் இன்று வியாழக்கிழமை மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற உள்ளது.

தலைநகர் டெல்லியில் உள்ள பாராளுமன்ற வளாகத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற உள்ளது.இந்த கூட்டத்தில் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் அரசின் சில முக்கியத் திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கர்நாடக எழுத்தாளர் தேவநூரவுக்கு தமிழ்நாடு அரசின் வைக்கம் விருது

**சென்னை, டிச. 12-**

தமிழ்நாடு அரசின் வைக்கம் விருது கர்நாடக எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் 2024-ம் ஆண்டுக்கான வைக்கம் விருது கர்நாடக எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றப் பேரவையில், கடந்த 30.03.2023 அன்று எல்லை கடந்து சென்று சமூக நீதிக்காக வைக்கத்தில் போராடிய தந்தை பெரியாரை நினைவு கூறும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் "வைக்கம் விருது" சமூகநீதி நாளான செப்டம்பர் 17-ம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, 2024-ம் ஆண்டிற்கான "வைக்கம் விருது" கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தை சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தேவநூர மஹாதேவா ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். மக்களின் மொழியியல் உரிமைகளின் மீதான நிலைப்பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். மேலும், சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக செயல்பட்டவர். இவர் மத்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ மற்றும் சாகித்ய அகாடெமி விருது போன்ற பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

வைக்கம் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தேவநூர மஹாதேவாவுக்கு ஐந்து லட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் தமிழ்நாடு முதல்வரால் கேரள மாநிலம் வைக்கத்தில் இன்று (12/12/2024) நடைபெற உள்ள வைக்கம் நினைவகம் திறப்புவிழா நிகழ்ச்சியில் வழங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முல்லைப் பெரியாறு அணை விவகாரம்:

# கேரள அரசுக்கு ஓ.பி.எஸ். கண்டனம்

**சென்னை, டிச. 12-**

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசுக்கு கண்டனம் தெரவித்துள்ள ஓ.பன்னீர் செல்வம், சுப்ரீம் கோர்ட்டில் முறையிட்டு முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையை நிலைநாட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது., முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும், பேபி அணை மற்றும் சிற்றணை ஆகியவை பழுதுபார்க்கப்பட்டு, பலப்படுத்தப்பட்ட பின் அணையின் நீர் மட்டத்தை 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 27-02-2006 அன்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பிற்கு எதிராக கேரள அரசு 18-03-2006 அன்று சட்டத் திருத்தத்தை கொண்டு வந்த போது முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள். இதனைத் தொடர்ந்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தி.மு.க. அரசு மேற்படி வழக்கை விரைந்து முடிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், முல்லைப் பெரியாறு பகுதியில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, தளவாட பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கக் கோரி தமிழ்நாடு நீர்வளத் துறை சார்பில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் வாரத்தில் கேரள அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும், ஆனால், இதுநாள் வரை அந்தக் கடிதத்திற்கு பதில் இல்லாத நிலையில் தளவாடப் பொருட்கள் முல்லைப் பெரியாறு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அதனை கேரள வனத் துறையினர் அனுமதிக்கவில்லை என்றும், கேரள நீர்ப்பாசனத் துறையின் ஒப்புதல் கடிதம் இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும் என்று கேரள அரசின் வனத்துறை தெரிவித்ததாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. கேரள அரசின் இந்தச் செயல் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினை அவமதிக்கும் செயல் ஆகும். கேரள அரசின் இந்தச் செயலைக் கண்டித்து 4-நாட்களாக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்ற நிலையில், தி.மு.க. அரசு வாய்மூடி மவுனியாக இருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள அரசின் செயலைக் கண்டித்து அறிக்கை விட வேண்டிய முதல்-அமைச்சர் வாய் திறக்காதது தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக் கொடுக்க முதல்வர் முன் வந்துவிட்டாரோ என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி தான் நடக்கிறது. காங்கிரஸ் கட்சி நான் எதிர்க்கட்சியாக செயல்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் காங்கிரஸ் கட்சியுடன் தனக்குள்ள நெருக்கமான உறவை பயன்படுத்தி தளவாடப் பொருட்களை எடுத்தும் செல்வதற்கான அனுமதியை பெறுவதில் தமிழ்நாடு முதல்-அமைச்சர் ஏன் தயக்கம் காட்டுகிறார் என்று தெரியவில்லை. கேரள அரசின் தமிழக விரோதச் செயல்பாட்டினைக் கண்டித்து முதல்வர் கொதித்து எழுந்திருக்க வேண்டும். ஆனால், அதைச் செய்ய மறுக்கிறார். உரிமைக்கு குரல் கொடுப்போம், உறவுக்கு கை கொடுப்போம் என்று வாயால் சொன்னால் மட்டும் போதாது. அதனைச் செயலில் காட்ட வேண்டும்.

முதல்வர் இன்று (12-12-2024) கேரள மாநிலம், வைக்கத்தில் புதுப்பிக்கப்பட்ட பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகத் திறப்பு விழாவிற்கு நேற்று (11.12.2024) கேரளா சென்றிருப்பதாகவும், அந்த நிகழ்ச்சிக்கு கேரள முதல்-மந்திரி தலைமை வகிக்க இருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இந்தச் சந்திப்பின்போது, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையை பலப்படுத்த கேரள அரசு அதிகாரிகள் இடையூறு செய்வதைச் சுட்டிக்காட்டி, முடிந்தால் இதனை மேடையிலேயே வலியுறுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றும், இதற்கு கேரள அரசு செவி சாய்க்காத பட்சத்தில், காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான உறவை முறித்துக் கொள்ளவும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினை அவமதிக்கும் கேரள அரசிற்கு எதிராக சுப்ரீம் கோர்டிடம் முறையிட்டு முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையை நிலைநாட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

தமிழ்நாடு அரசு,
**பேரூராட்சிகள் துறை, மங்கலம்பேட்டை பேரூராட்சி**
**கடலூர் மாவட்டம்**

**ந.க.எண் : 135 / அ1 /2024 / நாள் : 11.12.2024**

கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை பேரூராட்சியில் 15வது நிதி ஆணைய திட்டம் 2024-25 திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் பிரிவு கட்டிடம் அமைக்கும் பணிகளுக்கு எதிர்வரும் **17.12.2024 அன்று பிற்பகல் 3.00** மணிவரை ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலரால் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் மட்டுமே ஒப்பந்தபுள்ளி பதிவேற்றம் செய்யப்பட வேண்டும், இது தொடர்பான விவரங்களை பேரூராட்சி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வ. எண். | வேலையின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Construction of Proposed Additional Primary Health Centre in Mangalampet Town Panchayat | 1 எண்ணிக்கை | 60.00 |

**தலைவர்**
**பேரூராட்சி மன்றம்**
**மங்கலம்பேட்டை, கடலூர் மாவட்டம்.**

செ.ம.தொ.இ./ 5450 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**செயல் அலுவலர்**
**மங்கலம்பேட்டை பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.**

தமிழ்நாடு அரசு
**புத்தளம் இரண்டாம்நிலை பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்**

**ந.க.எண். 476 / 2024 / அ1, நாள் 10.12.2024**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் **(TURIP)** 2024-2025-ல் புத்தளம் பேரூராட்சிக்குட்பட்ட அரியபெருமாள்விளை தெற்கு காலனி முதல் தெரு, பணிக்கன்குடியிருப்பு முதல் தெற்கு பணிக்கன்குடியிருப்பு ஆல்கோவில் சாலை மற்றும் தெங்கம்புதூர் பள்ளம் சாலை முதல் பணிக்கன் குடியிருப்பு அம்மன்கோவில் வரை தார் தளம் அமைத்தல் பணி **ரூ.105.00இலட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் **06.01.2025 பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் **06.01.2025 (திங்கட்கிழமை) 3.30 மணி**க்கு திறக்கப்படும். இதர விபரங்களை இணையதளம் வாயிலாகவும் பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்,**
**புத்தளம் பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

**செ.ம.தொ.இ / 5456 / ஒப்பந்தப்புள்ளி / 2024**

# ரெகுநாதபுரம் ஊராட்சியில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

## நலத்திட்ட உதவிகளை வழங்கினார் கலெக்டர்



**ராமநாதபுரம், டிச. 12-**

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை தாலுகா ரெகுநாத புரம் ஊராட்சியில் நடை பெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பயனாளிக ளுக்கு நலத்திட்ட உதவி களை கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங்காலோன் வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ரெகுநாத புரம் ஊராட்சியில் வரு வாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் மக்கள் தொடர்பு முகாம் நிகழ்ச்சி நடைபெற் றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமை யேற்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது:-

மக்கள் மாவட்ட நிர்வா கத்தை தேடி வந்த நிலை மாறி மாவட்ட நிர்வாகமே மக்களைத் தேடி முகாமிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க அரசு உத்த ரவிட்டு ஒவ்வொரு மாதமும் தேர்வு செய்யப்பட்ட கிரா மங்கள் தோறும் மக்கள் தொடர்பு முகாம்கள் நடை பெறுகின்றன.

அந்த வகையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு கீழக் கரை வட்டம், ரெகுநாதபுரம் ஊராட்சியை தேர்வு செய்து சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்களிடம் கோரிக் கைகள் குறித்து 180 மனுக்கள் பெறப்பட்டு அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திடும் வகையில் தற்பொழுது 146 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதேபோல் இன்று 86 மனுக் கள் பெறப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் மீதும் மற்றும் ஏற் கனவே பெறப்பட்டு நிலு வையில் உள்ள மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்களின் மனுக்க ளுக்கு தீர்வு கிடைக்கச் செய் வது. அதேபோல் அரசின் நலத்திட்டங்கள் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக் கும் சென்றடையச் செய்வது என்பதேயாகும். மக்களுடன் முதல்வர் திட்டத்தில் சிறப்பு முகாமில் கலந்துகொண்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். மக்க ளைத்தேடி மருத்துவத்திட் டம் மக்களிடம் பயனுள்ள திட்டமாக இருந்து வருகின் றன. . எனவே தங்கள் பகுதி களில் இதுபோன்ற நிகழ்ச்சி கள் நடைபெறும் பொழுது பொதுமக்கள் தவறாமல் கலந்து கொண்டு அரசின் திட்டங்களை பெற்று பயன் பெற வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக கலெக்டர் பல்வேறு துறைகள் அரசின் திட்டங்கள் குறித்த சாதனை விளக்க கண்காட்சி அரங்கு களை பார்வையிட்டதுடன் பல்வேறு துறைகள் சார்பில் மொத்தம் 146 பயனாளிக ளுக்கு ரூ.1,18,12,819- மதிப் பீட்டில் அரசு நலத்திட்ட உத விகளை கலெக்டர் சிம்;ரன் ஜீத் சிங் காலோன் வழங்கி னார்.

இந்நிகழ்ச்சியில் ராமநாத புரம் வருவாய் கோட்டாட்சி யர் இராஜமனோகரன், திருப் புல்லாணி ஊராட்சி ஒன்றி யக்குழு தலைவர் புல்லாணி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் தன லெட்சுமி, கீழக்கரை வட் டாட்சியர் ஜமால்முகமது, திருப்புல்லாணி வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ் வரி, ரெகுநாதபுரம் ஊராட்சி மன்ற தலைவர் கோபாலகி ருஷ்ணன், துணைத்தலைவர் ஜெகத் ரட்சகன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அருப்புக்கோட்டை அருகே செட்டி குறிச்சியில்

# பெத்தண்ணாசாமி கோவில் திருவிழா: பக்தர்களுக்கு கறி விருந்து அன்னதானம்



**அருப்புக்கோட்டை, டிச. 12-**

அருப்புக்கோட்டை அருகே செட்டிகுறிச்சி கிராமத்தில் உள்ள கரிசல் காட்டின் நடுவே ஸ்ரீ பெத்தண்ணசாமி கோவில் உள்ளது. செட்டிகுறிச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 18 பட்டி கிராம மக்களின் குலதெய்வமாகவும் பெத்தண்ணசாமி இருந்து வருகிறார்.

இந்த கோவிலில் மூன்று வருடத்திற்கு ஒருமுறை பெத்த ணசாமி குதிரையில் காட்டுக்கு வேட்டைக்கு செல்வது போல் திருவிழா நடைபெறும். சென்ற ஆண்டு குதிரை திருவிழா நடைபெற்ற நிலையில் இந்த ஆண்டு பெத்தண்ணசாமி சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

கரிசல் காட்டில் வீற்றிருக்கும் பெத்தண்ணசாமி சிறப்பு வழிபாடு கணபதி ஹோமத்துடன் துவங்கி சிறப்பு பால் பழம் பன்னீர் என பல்வேறு வகையான வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மலர்க ளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாரதனை நடைபெற்றது.

இந்த திருவிழாவில் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். பெத்தண்ணசாமிக்கு கிடாய்கள் வெட்டப்பட்டு படைத்து பின்னர் பக்தர்களுக்கு கறி விருந்து அன்னதானம் வழங்கப் பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை எட்டிகுறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன் மற்றும் கோயில் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.





**திண்டுக்கல் மணிக்கூண்டு அருகே தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் கடை வாடகை கட்டிடங்களுக்கான ஜி.எஸ்.டி. வரிவிதிப்பை திரும்ப பெற வலியுறுத்தி மத்திய மாநில அரசுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் திண்டுக்கல் வர்த்தகர்கள் சங்க நிர்வாகிகள் ஜி. சுந்தரராஜன்,எஸ்.கே.சி.குப்புசாமி, பி.எம்.எஸ்.முருகேசன், திண்டுக்கல் தொழில் வர்த்தகர்கள் சங்க மாவட்ட மண்டல தலைவர் கிருபாகரன், மாவட்ட செயல் தலைவர் முகமது கனி, மாவட்ட பொது செயலாளர் நசீர் சேட், மாவட்ட பொருளாளர் கருணாகரன், தொழிலதிபர்கள் மங்களம் அழகு, ஆனந்தம் நடராஜன்,மங்கை ராஜா, மீனாட்சி பவன் ஹோட்டல் உரிமையாளர் கோபு உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

### ஃபெஞ்சல் புயல் பாதித்த பகுதிகளில்

# மருத்துவ முகாம் மற்றும் மக்களை தேடி மருத்துவ திட்டத்தால் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்..?

## அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு அ.தி.மு.க. மருத்துவரணி இணைச்செயலாளர் டாக்டர் பா.சரவணன் கேள்வி

**மதுரை, டிச. 12-**

ஃபெஞ்சல் பாதிக்கப் பட்ட பகுதிகளில் மருத்துவ முகாம் மற்றும் மக்களை தேடி மருத்துவ திட்டத்தால் பயன் பெற்றவர்கள் எத் தனை பேர்..? என்று அமைச் சர் மா.சுப்பிரமணியனுக்கு அ.தி.மு.க. மருத்துவரணி இணைச்செயலாளர் டாக்டர் பா.சரவணன் கேள்வி எழுப் பியுள்ளார். இது குறித்து அ.தி.மு.க.மாநில மருத்துவ ரணி இணைச் செயளாலர் டாக்டர் பா.சரவணன் நிருபர் களிடம் கூறியதாவது-



அ.தி.மு.க.பொதுச்செய லாளர் எடப்பாடியார் கிரா மப்புற மக்களுக்கு மருத்துவ வசதி எளிமையாக கிடைக்க 2000 அம்மா மினிகிளி னிக்கை எண்ணிக்கை உரு வாக்கினார்.இதன் மூலம் மாதம் தோறும் ஏறத்தாழ 22 லட்சம் பேர் பயன்பட்டனர். அந்தத் திட்டத்தை ஸ்டா லின் அரசு நிறுத்திவிட்டு மக் களை தேடி மருத்துவம் என்ற திட்டத்தை உருவாக்கி னார்கள்.இந்த திட்டத்தில் 10,959 சுகாதார தன்னாலர் களை நாளொன்றுக்கு 183 ரூபாய் மாதம் 5500-க்கு அமர்த்தினார்கள்.இதில் உப கரண பராமரிப்பு, செலவு எழுது பொருட்கள், போக்கு வரத்து செலவு ஆகியவற்றை உள்ளடக்கி வழங்கப்பட்டது மேலும்அதிகளவில் பணி சுமை வழங்கப்பட்டது இதில் சம்பளம் கட்டுபடி ஆகாமலும், பணிச்சுமை கார ணமாக ஏராளமானோர் ஓட் டம் பிடித்து விட்டனர். .

மேலும் கடந்த ஆகஸ்ட் மாதம் இந்த திட்டத்தில் 5.93 கோடி பயன் பெற்றதாக கூறு கிறார்கள். இதனைத் தொடர்ந்து அதே மாதம் அமைச்சர் மா.சு.ஒரு விழா வில் 1.86 கோடி அளவில் பயன்பட்டதாக கூறுகிறார் இதுவரை பயன் பெற்றவர்க ளின் பட்டியல்கள் எல்லாம் முன்னுக்கு பின் முரணாகத் தான் உள்ளது. சமீபத்தில் பெஞ்சால் புயல் ஏற்பட் டது.இதில் ஏறத்தாழ 37 ஆயி ரம் மக்கள் காய்ச்சல், வயிற் றுப்போக்கு உள்ளிட்ட பல் வேறு நோயினால் கடுமை யாக பாதிக்கப்பட்டார்கள் மக்கள் வீட்டிலே முடங்கி இருந்தார்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் மூல மும், மருத்துவ முகாம் மூல மும் பயன்பெற்ற பட்டி யலை அமைச்சர் மா.சு வெளியிடதயாரா ?.கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் 243 கோடியில் புற்றுநோய் மேலாண்மை இயக்கம் அமைக்கப்படும், 333 கோடி யில் துணை சுகாதார மைய முதல் மருத்துவக் கல்லூரி வரை அனைத்து நிலையில் உள்ள கட்டமைப்புகள் தரம் உயர்த்தப்படும் கூறினார்கள் இதுவரை எந்த பணியும் நடைபெற்றதாக தெரிய வில்லை.

அதேபோல் தமிழகத்தில் போதை பொருள் நடமாட் டம் அதிகரித்து வருகிறது, தமிழகம் முழுவதும் 250 மேற்பட்ட போதை ஒழிப்பு மையங்கள் உள்ளதாக கூறப் படுகிறது இதில் தனியார் மையங்கள் அதிக அளவில் உள்ளது. இதில் அனுமதி பெறாமல் சில இயங்கி வரு கிறது இதையெல்லாம் அரசு கவனிக்கிறதா என்பது கூட தெரியவில்லை?. மக்களை காக்கும் பொறுப்பில் இருக் கும் அமைச்சர் மா.சு. பத வியை தக்க வைக்க உதயநி திக்கு விழா எடுப்பதை மட் டும் கவனிக்காமல், மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஒட்டன்சத்திரத்தில் வர்த்தகர்கள் கடை அடைப்பு போராட்டம்



**ஒட்டன்சத்திரம், டிச. 12-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒருங்கிணைந்த வர்த்தகர்கள் நலச் சங்கம் சார்பில் ஜி.எஸ்.டி வரி ரத்து செய் யக் கோரியும், நகராட்சி சொத்து வரி உயர்வு ரத்து செய்ய கோரியும், பழைய கட்டிடங்களுக்கு புதிய முறையில் வரி வசூலிப்பதை நிறுத்த கோரியும்,தொழில்வரி வணிக உரிமை கட்டணம் உரிமைச் சான்று உள்ளிட்டவைகளை ரத்து செய் யக்கோரி வர்த்தகர்கள்கடைகளை அடைத்து கண்டன ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலை, பழனி சாலை, திண்டுக் கல் சாலை, காந்தி மார்க்கெட் புறவழிச் சாலை உள்ளிட்ட பகு திகளில் வணிகர்கள் காலை எட்டு மணி முதல் 12 முதல் மணி வரை கடையடைப்பு செய்தனர். இந்த கடையடைப்பு போராட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், காய் கறி மார்க்கெட் சங்கத்தினர்,தயிர் மார்க்கெட் ஒருங்கிணைந்த வர்த்தக சங்கத்தை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை வர்த்தக சங்கத் தலைவர் சுப்பி ரமணியன்,செயல் தலைவர் வஞ்சிமுத்து செயலாளர் தனிகா சலம், பொருளாளர் முகமது மீரான் உள்ளிட்டோர் ஒருங்கி ணைப்பு செய்திருந்தனர்

# சருவலையபட்டி வீரகாளியம்மன் கோவிலில் பூத்தட்டு திருவிழா



**மேலூர், டிச. 12-**

மதுரை மாவட்டம், மேலூர் அருகே சருகுவலை யபட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீ வீரகாளியம்மன் கோவில் பூத் திருவிழா 10ந் தேதி நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் நேற்று முன்தினம் 9ந் தேதி அன்று பால்குடத்தை மந்தை திடலில் இருந்து எடுத்து புறப்பட்டு ஸ்ரீ வீரகாளியம் மன் கோவிலுக்கு ஊர்வல மாக சென்று வீரகாளியம்ம னுக்கு விஷசே அபிஷேகம் செய்தனர். அன்று மாலை 3 மணியளவில் ஸ்ரீ வீரகாளி யம்மன் கோவிலில் இருந்து சாமி ஊர்வலம் நடைபெற் றது.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் சரு குவலையபட்டி, மணப்பட் டி, ஒத்தபட்டி, மெய்யப்பன் பட்டி, அண்ணா நகர், அரியூர் பட்டி, சுப்பிரமணியபுரம் மேற்குவளவு, ஒத்தவளவு, லெட்சுமிபுரம் ஆகிய பகுதி யில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மந்தை கோவிலில் இருந்து பூத்தட்டு எடுத்து புறப்பட்டு வீரகாளி யம்மன் கோவில் சென்று சாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை ஆண்டி நாட்டாமை, அழக நாட்டாமை, நோட்டம், சரு குவலையபட்டி கிராமபொ துமக்கள், இளைஞர்கள் ஏற் பாடு செய்திருந்தனர்.

# அழகப்பா பல்கலைக் கழக கல்லூரிகளுக்கு இடையிலான யோகாசன போட்டிகள்



**பரமக்குடி, டிச. 12-**

2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்கான அழகப்பா பல்கலைக் கழக கல்லூரிகளுக்கு இடையிலான யோகாசன போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பரமக்குடி அரசு கலைக் கல் லூரியில் நடைபெற்றது. பெண்களுக்கான போட்டியில் ஐந்து கல்லூரிகளும், ஆண்களுக்கான போட்டியில் நான்கு கல் லூரிகளும் கலந்து கொண்டது. போட்டிகளை கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் சிவக்குமார் துவங்கி வைத்து சிறப்பு ரையாற்றினார்.

இதில் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்விகள் மற்றும் யோக அறிவியல் துறையின் இணை பேராசிரியர் டாக்டர் மணியழகு போட்டியின் உற்று நோக்காளராக கலந்து கொண் டார். போட்டியின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் காளிதாசன், இணை ஒருங்கிணைப்பாளர்கள் டாக்டர் செல்வம்,டாக்டர் தவசி லிங்கம் மற்றும் கல்லூரி பொருளியல் துறை தலைவர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குனர் டாக்டர்.பிரசாத் செய்திருந்தார்.

### வத்தலக்குண்டுவில் முன்னாள் அமைச்சர்

# நத்தம் இரா.விசுவநாதன் பிறந்த நாள் விழா: கேக் வெட்டி கொண்டாட்டம்



**வத்தலகுண்டு, டிச. 12-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு மேற்கு ஒன் றிய இளைஞரணி செயலா ளர் தட்டி முருகன் சார்பில் அதிமுக துணை பொதுச்செ யலாளரும் முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா விஸ்வநாதன் எம் எல் ஏ பிறந்தநாள் விழாவை யொட்டி வத்தலக்குண்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவி லில் சிறப்பு பூஜை வழிபாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வத்தலக்குண்டு அருகே உள்ள கணவாய் பட்டி ஆசிரமக் காலனியில் உள்ள ஆதரவற்றோர் குழந் தைகள் இல்லத்தில் மாணவ மாணவிகளுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடி னார்கள். பின்னர் குழந்தைக ளுக்கு காலை உணவை அன் னதானமாக மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் தட்டி முருகன் வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் கமலக் கண்ணன், மாவட்ட எம்.ஜி. ஆர். மன்ற துணைச் செயலா ளர் ராமமூர்த்தி, ஒன்றிய மாணவரணி செயலாளர் செல்லப்பாண்டி, சேவுகம்பட்டி ஜெயலலிதா பேரவை நகரசெயலாளர் கருப்பையா,ஒன்றிய விவ சாய அணி செயலாளர் ஜெய ராமன், கணவாய்ப்பட்டி ஊராட்சி கிளைச் செயலாளர் கள் கருப்புசாமி,அன்பு உள் பட அதிமுக மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் குழந்தைகள் நல பாதுகாப்பு குழு கூட்டம்

## சேர்மன் மு.ரம்யா முத்துக்குமார் பங்கேற்பு



**திருமங்கலம், டிச. 12-**

மதுரை மாவட்டம் திரு மங்கலம் நகராட்சி அலுவல கத்தில் குழந்தைகள் நல பாதுகாப்பு குழு கூட்டம் சேர்மன் மு.ரம்யா முத்துக்கு மார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் தேற்று சிறப்பாக நடைபெற் றது.இந்த கூட்டத்திற்கு நக ராட்சி சேர்மன் மு.ரம்யா முத் துக்குமார் தலைமை தாங்கி னார். ஆணையாளர் அசோக் குமார் முன்னிலை வகித்தார். சுகாதார ஆய்வாளர் சிக்கந்தர் வரவேற்றார். இதில் குழந் தைகள் பாதுகாப்பு நல அலு வலர் அருள்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்.

அப்போது குழந்தைகள் பாதுகாப்பு, பள்ளிகள், மக ளிர் சுயஉதவிக் குழு கூட்டங் களில் குழந்தைகளுக்கு எதி ரான பாலியல் குற்றங்களை தடுப்பது பற்றிய விழிப்பு ணர்வு ஏற்படுத்துவது, குறைந்த வயது திருமணங் களை தடுப்பது, குழந்தைகள் தொடர்பான பிரச்னைகள் குறித்து 1098 என்ற ஹெல்ப் லைனுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என தெரிவிக்கப் பட்டது. மேலும் திருமங்க லம் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட பகுதிகளில் எந்த ஒரு குழந்தை திருமணமும் நடைபெறாமல் நகராட்சி நிர் வாகம் விழிப்புடன் செயல் பட்டதற்கு குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் அருள்குமார் பாராட்டு தெரி வித்தார்.

இந்நிகழ்வினில் அரசு மேல்நிலைப் பள்ளி தலை மையாசிரியர், மகளிர் சுய உதவிக் குழுவினர், காவல் துறையினர், தன்னார்வ தொண்டு அமைப்பினர்,நக ராட்சி ஊழியர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் கவுன்சிலர்கள், பள்ளி மாண விகள், குழந்தைகள் பாது காப்பு நல கமிட்டி உறுப்பி னர்கள் பங்கேற்றனர்.

# புகாரின் பேரில் நத்தம் போக்குவரத்து கிளை மேலாளர் பணியிட மாற்றம்

**நத்தம், டிச. 12-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு போக்குவரத்து பணிமனை கிளை மேலாளராக பணிபுரிந்தவர் ஆனந்தன். (50). இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு நத்தத் தில் இருந்து சிங்கம்புணரிக்கு சென்ற இலவச அரசு டவுன் பஸ்சில் மகளிருக்கு டிக்கெட் வாங்கப்பட்டதாக புகார் எழுந்து நடத்துநர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

மேலும் அரசு போக்குவரத்து பனிமனையில் 1000 லிட் டர் டீசல் மாயமானதாகவும் புகார் எழுந்தது. இந்த இரண்டு புகார்கள் குறித்தும் மதுரை மண்டல மேலாளர் விசாரணை நடத்தினர்.தொடர்ந்து நத்தம் போக்குவரத்து பணிமனை கிளை மேலாளர் ஆனந்தனை உசிலம்பட்டிக்கு பணியிட மாற்றம் செய்து மண்டல மேளாளர் உத்தரவிட்டுள்ளார்.பு திய மேலாளராக தினகரன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



**மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள பாரதியார் சிலைக்கு உயர் நீதிமன்ற நீதிபதி விக்டோரியா கௌரி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் பள்ளி தாளாளர் வழக்கறிஞர் பார்த்தசாரதி, அம்மா கேட்டரிங் உரிமையாளர் கிருஷ்ணன், மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலு, மதுரை கல்லூரி வாரிய உறுப்பினர் இல.அமுதன் ,பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன் ஆகியோர் உள்ளனர்.**



தமிழ்நாடு அரசின் சார்பில் மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, பிரபாகரராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் அன்புச்சோழன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு கேரளாவில் உற்சாக வரவேற்பு

**சென்னை, டிச. 12-**

வைக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கேற்க கேரளா சென்றடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள வைக்கத்தில் தீண்டாமைக்கு எதிராக போராட்டம் நடந்தது.

இதில் பெரியார் சமூகநீதி காக்க போராடி வெற்றி பெற்றார். அந்த வெற்றியை நினைவுகூரும் வகையில் வைக்கத்தில் பெரியார் நினைவகமும், பெரியார் நூலகமும் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டு உள்ளது.

வைக்கம் போராட்டத்தில் பெரியார் பங்கேற்று நூற்றாண்டு நிறைவை கொண்டாடுவதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வைக்கம் நகரில் உள்ள பெரியார் நினைவகத்தையும், நூலகத்தையும் புதுப்பித்திட ரூ.8 கோடியே 14 லட்சம் நிதி ஒதுக்கி உத்தரவிட்டார்.

அதன்படி புனரமைப்பு பணிகளும், நூலகத்தை விரிவுபடுத்தும் பணிகளும் நடந்து முடிந்துள்ளன. அதில் பெரியாரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான அரிய புகைப்படங்கள் அடங்கிய நிரந்தர புகைப்பட கண்காட்சி கூடம், நூலகம், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா ஆகியவை சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு உள்ளது. மேலும் அமர்ந்த நிலையில் பெரியார் சிலையும் இருக்கிறது.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையால் புதுப்பிக்கப்பட்ட பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (12-ம் தேதி) காலை 10 மணிக்கு திறந்து வைக்கிறார்.

இந்த விழாவுக்கு கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் தலைமை தாங்குகிறார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி முன்னிலை வகிக்கிறார்.

தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்டோரும், கேரளா மாநில மந்திரிகளும், உயர் அதிகாரிகளும் பங்கேற்கிறார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் வரவேற்று பேசுகிறார்.

கேரள மாநில அரசின் தலைமைச் செயலாளர் சாரதா முரளிதரன் நன்றி கூறுகிறார்.

இந்த நிலையில், வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (புதன்கிழமை) சென்னையில் இருந்து விமானம் மூலம் கேரளா புறப்பட்டு சென்றார். கொச்சி விமான நிலையம் சென்றடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.




தலைமைச்செயலகத்தில் நேற்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர், போக்குவரத்துதுறை சார்பில் தமிழ்நாடு மோட்டார் வாகனம் பராமரிப்புத்துறை இயக்குநரகம் மற்றும் 20 அரசு தானியங்கி பணிமனைகள் செயல்பாடுகளை கணினி மயமாக்குதல் திட்டத்தை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச்செயலகத்தில் நேற்று, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீதான தொடர் நடவடிக்கைகள் மற்றும் துறை சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.



சென்னை சைதாப்பேட்டையில், கல்லூரி கல்வி இயக்கக கூட்ட அரங்கில், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறும் 25 மாணவர்களுக்கு மாதம் தலா ரூ.25,000-த்திற்கான காசோலையும், 44 மாணவர்களுக்கு முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகைக்கான ஆணைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கக்கூடாது என்று தமிழக சட்டசபையில் கண்டன உரையாற்றி, வீர முழக்கமிட்டதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியை கட்சியின் அவை தலைவர் தமிழ்மகன் உசேன் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்.

# ரிசர்வ் வங்கியின் 26-வது கவர்னராக பதவியேற்றார் சஞ்சய் மல்ஹோத்ரா

**புது டெல்லி, டிச. 12-**

**ரிசர்வ் வங்கியின் 26-வது கவர்னராக சஞ்சய் மல்ஹோத்ரா நேற்று பதவியேற்றுக் கொண்டார்.**



நேற்று காலை மத்திய தலைமையகத்திற்கு சென்ற சஞ்சய் மல்ஹோத்ராவை ரிசர்வ் வங்கியின் மூத்த ஊழியர்கள் வரவேற்றனர். சஞ்சய் மல்ஹோத்ரா பொறுப்பேற்ற போது துணை நிலை ஆளுநர்கள் சுவாமிநாதன், ராஜேஸ்வர ராவ், சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஐ.ஏ.எஸ். அதிகாரியான மல்ஹோத்ரா ரிசர்வ் வங்கியின் தலைமைப் பொறுப்பில் மிக முக்கியமான கட்டத்தில் பொறுப்பேற்று இருக்கிறார். இவரது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். முன்னதாக கடந்த 2018-ம் ஆண்டு முதல் ரிசர்வ் வங்கியின் கவர்னராக இருந்த சக்திகாந்த தாஸ் பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில், ரிசர்வ் வங்கியின் புதிய கவர்னராக சஞ்சய் மல்ஹோத்ரா நியமிக்கப்பட்டார்.

ஆர்பிஐ ஆளுநராகப் பொறுப்பேற்ற பிறகு சஞ்சய் மல்ஹோத்ரா செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அவர் அளித்த பேட்டியில், மிகப்பெரிய பொறுப்பு தரப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வேன். அனைத்து முடிவுகளும் பொது நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கப்படும். மத்திய வங்கி கொள்கை விஷயங்களில் தற்போதுள்ள நடைமுறைகள் தொடரும். ஆனால் தற்போதைய உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் சூழலையடுத்து எச்சரிக்கையாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். நிதிச் சேர்க்கையை மேலும் ஊக்குவிக்க ரிசர்வ் வங்கி தொழில்நுட்பத்தை விரிவாகப் பயன்படுத்தும் என்று அவர் கூறினார்.

## ரஷ்ய நண்பர்களுக்கு இந்தியா துணை நிற்கும்:

# அதிபர் புடினை சந்தித்த மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதி

**மாஸ்கோ, டிச. 12-**

இந்தியா தனது ரஷ்ய நண்பர்களுக்கு எப்போதும் துணை நிற்கும் என்று ரஷ்யாவில் பயணம் மேற்கொண்டுள்ள மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதிபட தெரிவித்தார்.

இந்தியா - ரஷ்யா இடையேயான உறவை வலுப்படுத்தும் வகையில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மூன்று நாள் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஷ்யாவில் உள்ள இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடிய ராஜ்நாத் சிங், கலினின் கிராட் நகரில் திங்கட்கிழமை நடந்த நிகழ்ச்சியில் ஐ.என்.எஸ். துஷில் என்ற கப்பலை அறிமுகப்படுத்தி, ரஷ்யாவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் மாஸ்கோ நகருக்கு சென்ற ராஜ்நாத் சிங், இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்த வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் தலைநகர் மாஸ்கோவில் உள்ள அதிபர் மாளிகையில் நடைபெற்ற இந்தியா ரஷ்ய ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான 21-வது கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அதனை தொடர்ந்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சந்தித்து பேசினார். இரு நாடுகள் இடையிலான ராணுவ ஒத்துழைப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

அப்போது ராஜ்நாத் சிங் பேசியதாவது,

இந்தியா-ரஷ்யா நட்புறவு உலகின் மிக உயரமான மலையை விட உயர்ந்தது. உலகின் மிக ஆழமான கடலை விட ஆழமானது. இந்தியா தனது ரஷ்ய நண்பர்களுக்கு எப்போதும் துணை நிற்கும். எதிர்காலத்திலும் அதை தொடருவோம்.

இவ்வாறு ராஜ்நாத்சிங் பேசினார்.

## அரியலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட

# காவிரி படுகை மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு

## மேலும் 22 மாவட்டங்களில் கனமழை பெய்யும்

**சென்னை, டிச. 12-**

**அரியலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட காவிரி படுகை மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் 22 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் தெரிவித்துள்ளது.**

இலங்கை கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவி வரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு-வடமேற்கு திசையில், இலங்கை - தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும். இதன்காரணமாக இன்று தமிழகத்தில் 4 மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று காலை 8.30 மணி அளவில் இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவுகிறது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு-வடமேற்கு திசையில், இலங்கை - தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும். இதன் காரணமாக, இன்று 12-ம் தேதி, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை உள்ளிட்ட காவிரி படுகை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், திருச்சி, சிவகங்கை, ராமநாதபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை 13-ம் தேதி, தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வரும் 14-ம் தேதி மற்றும் 15-ம் தேதிகளில், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 16-ம் தேதி, கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. வரும் 17-ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.